தினபூமி
thinaboomi.com
பூமி: 34 சுற்று: 37 மார்கழி 05
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, சனி, டிசம்பர் 20, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



2 ஆண்டுகளில் உக்ரைனுக்கு 90 பி. யூரோ நிதியுதவி வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல்

....2-ம் பக்கம்

சாந்தி மசோதா நிறைவேற்றம்: தொழில்நுட்பத்துறையில் மாபெரும் மாற்றம் ஏற்படும்: பிரதமர் மோடி

...3-ம் பக்கம்

டி-20 உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிப்பு

....6-ம் பக்கம்






● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், இலங்கை அரசின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சந்தித்து, 'டித்வா' புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் மக்களுக்கு உதவிடும் வகையில் நிவாரணப் பொருட்களை தமிழ்நாடு அரசு வழங்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது தலைமைச் செயலாளர் முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், இலங்கை நாட்டு துணைத் தூதர் கணேசநாதன் கீதீஸ்வரன், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று நெல்லை பயணம்

## 2 நாட்களில் பல்வேறு திட்டங்களை துவக்கி வைக்கிறார்

நெல்லை, டிச. 20-

**நெல்லையில் இன்றும், நாளையும் (டிச.20, 21ல்) முதல்வர் மு.க. ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.**

நெல்லையில் நாளை 44,900 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ரூ.356 கோடியில் திட்டங்கள், ரூ.110 கோடி மதிப்பில் நூலகம் அமைக்கும் பணியை தொடங்கி வைக்கிறார். மேலும் திருநெல்வேலியில் கட்டப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை இன்று திறந்து வைக்கிறார்.

தமிழகத்தின் 3,200 ஆண்டு கால வரலாற்றை பறைசாற்றும் வகையில், ரூ.56 கோடியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், ரெட்டியார்பட்டி அருகேயுள்ள குலவணிகர்புரம் கிராமத்தில் ரூ.56.60 கோடியில் பொருநை அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருகிறது. இதன் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், நாளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அருங்காட்சியகத்தை திறந்து வைக்கிறார்.

தற்போது திருநெல்வேலியில் அமைக்கப்பட்டு வரும் பொருநை அருங்காட்சியகத்தில், தாமிரவருணி நதிக்கரையில் அமைந்த தமிழர்களின் நாகரிகத் தொன்மையை விளக்கும் வகையில் சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த அரும்பொருள்களை அழகுறக் காட்சிப்படுத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

நாளை பொருநை அருங்காட்சியகத்தை திறந்துவைத்துப் பார்வையிடும் முதல்வர், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சுமார் ரூ.200 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய விரிவாக்க கட்டிடத்தையும் அவர் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்க உள்ளார். இது குறித்து அமைச்சர் எ.வ. வேலு செய்தியாளர்களிட பேசுகையில், "மொத்தம் 97% பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், மீதமுள்ள உள் அலங்காரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் இந்தத் திட்டத்தில் அதிக ஈடுபாடு கொண்டுள்ளதாகவும், பணிகளை விரைந்து முடித்துள்ளார். முதல்வர் ஸ்டாலின் நளை பொருநை அருங்காட்சியகத்தைத் திறந்து வைக்கவுள்ளார் என்றார்.

குளிர்கால கூட்டத்தொடர் நிறைவு:

# பாராளுமன்ற இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைப்பு

புதுடெல்லி, டிச. 20-

**பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன. நிறைவு நாளை முன்னிட்டு நேற்று இரு அவைகளின் நிறைவிலும் வந்தே மாதரம் இசைக்கப்பட்டது.**



பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 1-ம் தேதி தொடங்கியது. இக்கூட்டத்தொடர் 19-ம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது 15 அமர்வுகள் கொண்ட குளிர்கால கூட்டத்தொடரின் முதல் 2 நாட்களில் சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தம் பணி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. 3-ம் தேதி முதல் கூட்டத் தொடரின் அலுவல்கள் நடந்தன.

இதில் வந்தே மாதரம் பாடல், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், திருப்பரங்குன்றம் விவகாரம் உள்ளிட்டவை குறித்து காரசார விவாதங்கள் நடந்தன. அணு சக்தித் துறையில் தனியாரை அனுமதிப்பது உள்பட முக்கிய மசோதாக்கள் இரு அவையிலும் நிறைவேற்றப்பட்டன.

மக்களவையில் நேற்று முன்தினம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமான விக்சித் பாரத்-ரோஜ்கர் மற்றும் அஜீவிகாமிஷன் (விபி-ஜி ராம் ஜி) மசோதா எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இரு அவைகளிலும் நிறைவேறியது.

இந்த நிலையில் நேற்று காலை மக்களவை கூடியதும் குளிர்கால கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவு பெறுவதாகவும், கால வரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாகவும் சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார். அப்போது

(கடைசி பக்கம் பார்க்க)

அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக

# சங்க நிர்வாகிகளுடன் டிச.22-ல் அமைச்சர்கள் பேச்சுவார்த்தை

சென்னை, டிச. 20-

**தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து அரசு ஊழியர்கள், ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் வரும் 22ம் தேதி அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக அரசு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து வரும் 22.12.2025 அன்று காலை 10.00 மணிக்கு சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள 10-வது தளத்தில் உள்ள ஆலோசனைக் கூடத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வெளியானது வரைவு வாக்காளர் பட்டியல்:

# மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5.43 கோடி

* 97.37 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் அதிரடி நீக்கம்
* விடுபட்டவர்கள் விண்ணப்பிக்க ஜன. 18 வரை அவகாசம்

சென்னை, டிச. 20-

**தமிழ்நாட்டில் வரைவு வாக்காளர் பட்டியலை மாநில தேர்தல் ஆணையர் அர்சனா பட்நாயக் நேற்று வெளியிட்டார். தமிழ்நாட்டில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5.43 கோடி பேர். மொத்தம் 97.37 லட்சம் வாக்காளர்களின் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக சென்னை மாவட்டத்தில் சுமார் 14 லட்சம் பேரின் பெயர்கள் வாக்காளர் பட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுபட்டவர்கள் தங்களின் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க ஜனவரி மாதம் 18-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**



தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நவம்பர் 4-ம் தேதி தொடங்கியது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு, வீடாக சென்று படிவங்களை வழங்கினர். படிவங்களை பெறுவதற்கான சிறப்பு முகாம்களும் நடந்தது. தேர்தல் கமிஷன் 2 முறை வழங்கிய கால அவகாசம் கடந்த 14-ம் தேதியுடன் முடிவடைந்தது. தமிழ்நாட்டில் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை 100 சதவீதம் வழங்கி, அவற்றை திரும்ப பெற்று உள்ளனர். பெரும்பாலான படிவங்களை வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் ஏற்கனவே பதிவேற்றம் செய்துவிட்டனர்.

இந்த சூழலில், எஸ்.ஐ.ஆர். பணிகளை தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்ட படிவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்டார். மேலும் தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டனர்.

அதன் விபரம் பின்வருமாறு;

**கோவை மாவட்டம்:**

1) முன்பிருந்த மொத்த வாக்காளர்கள் - 32,25,198.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 25,74,608.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 6,50,590.

**காஞ்சிபுரம் மாவட்டம்:**

1) முன்பிருந்த மொத்த வாக்காளர்கள் -14,01,198.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 11,26,924.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 6.50 லட்சம் - 2,74,274.

**கரூர் மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 8,98,362.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 8,18,672.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 79,690.

**திண்டுக்கல் மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 19,34,447.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 16,09,533.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 3,24,914.

**தஞ்சாவூர் மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 20,98,561.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 18,92,058.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 2,06,593.

**திருச்சி மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 23,68,967.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 20,37,180.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 3,31,787.

**நெல்லை மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 14,20,334.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 12,03,368.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 2,16,966.

**விழுப்புரம் மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 17,27,490.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 15,44,625.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,82,865.

**அரியலூர் மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 5,30,890.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 5,06,522.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 24,368.

**தருமபுரி மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 12,85,432

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 12,03,917.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 81,515

**கடலூர் மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 21,93,577.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 19,46,759.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 2,46,818.

**கிருஷ்ணகிரி:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 16,80,626.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 15,06,077.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,74,549.

**நாகப்பட்டினம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - - 5,67,730.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 5,10,392.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 57,338.

**செங்கல்பட்டு:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 27,87,362.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 20,85,491.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 7,01,871.

**திருப்பூர் மாவட்டம்:**

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 24,44,929.

(கடைசி பக்கம் பார்க்க)

ரோடு ஷோ, அரசியல் கட்சி கூட்டங்களுக்கு

# இறுதி வழிகாட்டு நெறிமுறைகளை ஜன. 5-க்குள் வெளியிட வேண்டும்

## தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட் கெடு

சென்னை, டிச. 20-


**ரோடு ஷோ, அரசியல் கட்சி கூட்டங்களுக்கு இறுதி வழிகாட்டு நெறிமுறைகளை வருகிற ஜனவரி 5-ம் தேதிக்குள் வெளியிட தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.**

கரூரில் த.வெ.க. விஜய் கலந்து கொண்ட கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 41 பேர் பலியானார்கள். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து ரோடு ஷோ உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளுடன் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டன. இந்த வழக்குகளை விசாரித்த ஐகோர்ட், ரோடு ஷோ உள்ளிட்ட அரசியல் கூட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கக் கோரி தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டது.

இதன்படி, தமிழ்நாடு அரசு அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி, வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கியது. இந்த வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. இதில் அரசு விதித்துள்ள நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் ஜனநாயகத்துக்கு விரோதமாக இருப்பதாக அ.தி.மு.க.வும், த.வெ.க.வும் பதில் மனுக்களை தாக்கல் செய்தன.

பின்னர் இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட ஐகோர்ட் தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவத்சவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் கொண்ட முதல் பெஞ்ச் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டது. இந்த நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் நேற்று பிறப்பித்தனர். அதில் அரசியல் கட்சிகள் கூறியுள்ள ஆலோசனைகளை பரிசீலித்து, இறுதி வழிகாட்டு நெறிமுறைகளை வருகிற ஜனவரி 5-ம் தேதிக்குள் வெளியிட தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர். மேலும் வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அவற்றை எதிர்த்து வழக்கு தொடரலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 447.55 | 150.85 |
| பாயின்ட் 84,929.36 | பாயின்ட் 25,966.40 |



**தங்கம்**
1 சவரன் ₹99,040
1 கிராம் ₹12,380



**வெள்ளி**
1 கிலோ ₹221,000
1 கிராம் ₹221.00

**டாலர்** ₹89.64

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34


### அடுத்த 2 ஆண்டுகளில் உக்ரைனுக்கு

# 90 பி. யூரோ நிதியுதவி வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல்

**பிரசல்ஸ், டிச. 20-**

அடுத்த 2 ஆண்டுகளில் உக்ரைனுக்கு 90 பி. யூரோ நிதியுதவி வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல் அளித்துள்ளது.

ரஷ்யா உடனான போரால் பாதிக்கப்பட்ட உக்ரைன் நாட்டின் பாதுகாப்புத்துறைக்கு நிதியுதவி வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலதன சந்தையில் இருந்து 90 பில்லியன் யூரோ நிதி திரட்டி, அடுத்த 2 ஆண்டுகளில் உக்ரைனுக்கு நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



உக்ரைனுக்கு நிதியுதவி வழங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் ஒப்புதல் தெரிவித்திருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வான்டெர் லெயன் தெரிவித்துள்ளார். அதே சமயம் ரஷ்யா போர் இழப்பீடுகளை தரும் பட்சத்தில், ஐரோப்பிய நாடுகளிடம் பெற்ற கடனை உக்ரைன் திருப்பி செலுத்த வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### துணை ராணுவம் திடீர் தாக்குதல்:

# சூடானில் 16 பேர் பலி

**கார்டூமின், டிச. 20-**

வடக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள சூடானில் உள்ள தெற்கு கார்டூமின் மாகாணம் டில்லிங் பகுதியில் துணை ராணுவப்படையினர் நேற்று தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பொதுமக்கள் 16 பேர் உயிரிழந்தனர்.

வடக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு சூடான். அந்நாட்டில் கடந்த 2021-ம் ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை ராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை ராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. துணை ராணுவம் கட்டுப்பாட்டில் இருந்த தலைநகர் கார்டூமினை கடந்த மார்ச் மாதம் ராணுவம் கைப்பற்றியது. அதே வேளை, ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில், அந்நாட்டின் தெற்கு கார்டூமின் மாகாணம் டில்லிங் பகுதியில் துணை ராணுவப்படையினர் நேற்று தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பொதுமக்கள் 16 பேர் உயிரிழந்தனர்.

# வங்காளதேசத்தில் இந்து மதத்தை சேர்ந்த இளைஞர் அடித்து கொலை

**டாக்கா, டிச. 20-**

வங்காளதேசத்தில் இந்து மத இளைஞர் அடித்துக் கொலை செய்யப்பட்டு அவரது உடலை நடுரோட்டில் தீ வைத்து எரித்த கும்பலால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

வங்காளதேசத்தில் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசுக்கு எதிரான போராட்டத்தில் முதன்மையாக செயல்பட்ட மாணவர் அமைப்பின் தலைவராக செயல்பட்டவர் ஷெரீப் ஓசாமா பெடி. இவர் இந்தியாவுக்கு எதிரான பல்வேறு கருத்துகளை தெரிவித்து வந்தார். இதனிடையே, தலைநகர் டாக்காவில் உள்ள சாலையில் ரிக்‌ஷாவில் சென்ற ஓசாமா பெடி மீது பைக்கில் வந்த மர்ம நபர் துப்பாக்கி சூடு நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் படுகாயமடைந்த ஓசாமா சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஷெரீப் ஓசாமாவை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் பின்னணியில் இந்தியா இருப்பதாக வங்காளதேசத்தில் உள்ள மத ரீதியிலான அமைப்புகள், அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. மேலும், ஷெரீப்பை சுட்டுக்கொன்றவர் இந்தியாவிற்கு தப்பிச்சென்றுவிட்டதாகவும் குற்றஞ்சாட்டி வருகின்றன. ஷெரீப் கொல்லப்பட்டதை கண்டித்து வங்காளதேசத்தில் வன்முறை வெடித்துள்ளது.

இந்நிலையில், வங்காளதேசத்தில் இந்து மத இளைஞரை கும்பல் அடித்துக் கொன்று உடலை சாலையில் தீ வைத்து எரித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்நாட்டின் மைமன்சிங் மாவட்டத்தை சேர்ந்த இளைஞர் தீபு சந்திர தாஸ் (வயது 30). இந்து மத இளைஞரான இவர் துபெலியா பகுதியில் உள்ள ஆயத்த ஆடை தொழிற்சாலையில் வேலை செய்து வந்தார்.

சந்திர தாஸ் இஸ்லாமிய மதத்திற்கு எதிராக கருத்து தெரிவித்ததாகவும், இஸ்லாமிய மதக்கடவுளை அவமதித்து விட்டதாகவும் கூறி அவரை நேற்று இரவு 500க்கும் மேற்பட்டோர் அடங்கிய கும்பல் அடித்து கொடூரமாக கொன்றுள்ளனர். பின்னர் அவரது உடலை சாலையோரம் இருந்த மரத்தில் தூக்கில் தொங்கவிட்டுள்ளனர். பின்னர், சந்திர தாசின் உடலை நடு ரோட்டில் வீசி உடலை தீ வைத்து எரித்துள்ளனர். இந்த சம்பவம் வங்காளதேசத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் வங்காளதேசத்தில் சிறுபானமையினராக உள்ள இந்து மதத்தினர் இடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் பிட்புல், ராட்வீலர் நாய்களுக்கு இன்று முதல் தடை

## மீறினால் ரூ.1 லட்சம் அபராதம்

**சென்னை, டிச. 20-**

சென்னை மாநகராட்சியில் பிட்புல் மற்றும் ராட்வீலர் இன வளர்ப்பு நாய்களை வளர்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது மீறி வளர்த்தால் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் மாமன்ற கூட்டம் வாக்காளர் திருத்த சிறப்பு பணிகளுக்காக கடந்த மாதம் நடைபெறவில்லை. இதன் காரணமாக நேற்று (வெள்ளிக்கிழமை) சென்னை மாநகராட்சி கூட்டம் மேயர் பிரியா ராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு கழிவறைகளுடன் கூடிய ஓய்வறைகள் 200 வார்டுகளிலும் ஏற்படுத்தப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் சென்னையில் பிட்புல், ராட்வீலர் இன நாய்களை புதிதாக வாங்கி வளர்க்க இன்று முதல் (டிச. 20) தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறி வளர்த்தால் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் ஏற்கனவே உரிமம் பெற்ற பிட்புல், ராட்வீலர் நாய்களை வீட்டிற்கு வெளியே அழைத்து செல்லும்போது கழுத்துப்பட்டை மற்றும் வாய்க்கவசம் அணிவிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை பின்பற்றாத உரிமையாளர்களுக்கு ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக சென்னையில் செல்லப் பிராணிகளுக்கு உரிமம் பெற இன்றே கடைசி நாளாகும். இன்று முதல் வீடு வீடாக ஆய்வு செய்து உரிமம் பெறாத செல்லப் பிராணிகளின் உரிமையாளர்களுக்கு ரூ,5000 வரை அபராதம் விதிக்கப்படும் என மாநகராட்சி எச்சரிக்கை விடுத்திருந்தது. சென்னை மாநகராட்சியில், 98,523 செல்லப்பிராணிகள் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு இருந்தாலும், தற்போது வரை 56,378 செல்லப் பிராணிகளுக்கு மட்டுமே உரிமம் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**மரம் மனிதனின் உரம்**

## தங்கம், வெள்ளி விலை சற்று சரிவு



**சென்னை, டிச. 20-**

தங்கம் விலை நேற்று சற்று குறைந்து விற்பனையானது. அதன்படி தங்கம் 1 கிராம் ரூ.12,380-க்கும், சவரன் ரூ.99,040-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் நேற்று சரிவை சந்தித்து விற்பனையானது. வெள்ளி 1 கிராம் ரூ.221-க்கும். ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 21 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

தங்கம் விலை மீண்டும் கட்டுக்கடங்காமல் ஏறத் தொடங்கியது. கடந்த 12-ம் தேதியில் இருந்து அதன் விலை தாறுமாறாக ஏற்றம் கண்டது. கடந்த 11-ம் தேதி ஒரு சவரன் ரூ.96,400 என்று இருந்த நிலையில், 12-ம் தேதி ஒரே நாளில் சவரனுக்கு ரூ.2,560 உயர்ந்து ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 960-க்கு விற்பனை ஆனது. இதன் தொடர்ச்சியாக கடந்த 15-ம் தேதி மட்டும் சவரனுக்கு ரூ.1,160 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 120-க்கு விற்றது. இதன் மூலம் தங்கம் இமாலய உச்சத்தை தொட்டது.

அதற்கு மறுநாள் விலை சற்று குறைந்து மீண்டும் ஏறுமுகத்தில் இருக்கிறது. இதேபோல் வெள்ளி விலையும், தாறுமாறாக எகிறி வருவதை பார்க்க முடிகிறது. வெள்ளியின் தேவை அதிகரித்து இருப்பதால் அதன் விலை கட்டுக்கடங்காமல் உயருகிறது. இதன் தொடர்ச்சியாக நேற்றும் தங்கம், வெள்ளி விலை உயர்ந்து இருந்தது. தங்கத்தை பொறுத்தவரையில், நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.40-ம், கிராமுக்கு ரூ.320-ம் உயர்ந்து ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 440-க்கும், ஒரு சவரன் ரூ.99 ஆயிரத்து 520-க்கும் விற்பனை ஆனது.

வெள்ளியை எடுத்துக்கொண்டால் நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.2-ம், கிலோவுக்கு ரூ.2 ஆயிரமும் அதிகரித்து, ஒரு கிராம் ரூ.224-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 24 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் வெள்ளி விலை தொடர்ந்து வரலாறு காணாத புதிய உச்சத்தை பதிவு செய்து வருகிறது.

இந்நிலையில் தங்கம் விலை நேற்று சற்று குறைந்துள்ளது. அதன்படி கிராமுக்கு ரூ.60-ம், சவரனுக்கு ரூ.480-ம் குறைந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.12,380-க்கும், சவரன் ரூ.99,040-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் நேற்று சரிவை சந்தித்து விற்பனையானது. இதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.3-ம், கிலோவுக்கு ரூ.3 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.221-க்கும். ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 21 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

**தங்கம் விலை நிலவரம் (5 நாட்கள்):**

1) 19.12.2025- ஒரு சவரன் ரூ.99,040.
2) 18.12.2025- ஒரு சவரன் ரூ.99,520.
3) 17.12.2025- ஒரு சவரன் ரூ.99,200.
4) 16.12.2025- ஒரு சவரன் ரூ.98,800.
5) 15.12.2025- ஒரு சவரன் ரூ.1,00,120.

**20-12-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** விடுமுறைக் கால உல்லாசமான சுற்றுலாப் பயணங்களால் உள்ளத்தில் சந்தோஷம் பொங்கும். காதல் மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும். செல்வம் சேரும்.

**ரிஷபம்:-** முறையற்ற வழிகளில் சென்றால் கஷ்டப்பட நேரும். மனைவியின் வாய்த்துடுக்கால் உறவுகளுக்குள் பகை ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் ஆதாயம் அடைவீர்கள்.

**மிதுனம்:-** குடும்பத்தோடு செல்லும் குறுகிய தூரப் பயணங்கள் மகிழ்ச்சி தரும். சொகுசான புதிய வாகன யோகம் ஏற்படும். தொழிலில் ஏற்படும் மாற்றங்களால் வருமானம் கூடும்.

**கடகம்:-** எல்லா வளமும் பெருகும். தொழில் வளர்ச்சிகாக வரும் வாய்ப்புகளை நழுவவிடாதீர்கள். உல்லாசப் பயணங்களால் உள்ளம் மகிழும். பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனிவீடும் அமையும்.

**சிம்மம்:-** பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும். பிறர் குறைகூறா வண்ணம் தங்கள் மரியாதையைக் காத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**கன்னி:-** முயற்சிகள் தாமதமாவதால் மனதில் சஞ்சலம் ஏற்படும். தாயின் உடல்நிலையில் சிறப்பு கவனம் தேவை. தடைபடும் காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதிருந்தால் வெற்றி உங்கள் பக்கம்.

**துலாம்:-** வியாபார முன்னேற்றத்திற்கான புது ஆலோசனைகளும் நல்ல வாய்ப்புகளும் தேடிவரும். பலவகையிலும் பணவரவு கூடும். புதிய நண்பர்கள், உடன் பிறப்புக்களால் உதவி உண்டு.

**விருச்சிகம்:-** வரவுக்கு மிஞ்சிய, சமாளிக்க முடியாத அளவுக்குச் செலவுகள் ஏற்படும். கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க, பிறர் விவகாரங்களில் மூக்கை நுழைக்காது இருப்பது நல்லது.

**தனுசு:-** தொழிலில் தன்னம்பிக்கையும், மனதில் மகிழ்ச்சியும் கூடும். வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை எய்தி, வருமானத்தைக் கூட்ட முயல்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**மகரம்:-** பெண்களால் விரயச்செலவுகள் ஏற்படும். நான்கு சுவற்றுக்குள் இருக்க வேண்டிய குடும்ப விவகாரங்களை பொது இடத்தில் பேசாதீர்கள். புதிய பொருட்களை யோசித்து, அவசியப்பட்டால் மட்டும் வாங்குங்கள்.

**கும்பம்:-** வீட்டில் மகிழ்ச்சி நிலவும். திருமணம் போன்ற கொண்டாட்டங்களில் கலந்து மகிழ்வீர்கள். வியாபாரம் அதிகரித்து இலாபத்தை புதிய சேமிப்புக்களில் முதலீடு செய்வீர்கள்.

**மீனம்:-** மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் அரசு அதிகாரிகளுக்குத் தன்னம்பிக்கை கூடும். ஆரோக்கியம் மேம்பட்டு தேகதிடம் அதிகரிக்கும். எதிர்பாரத முன்னேற்றங்களால் வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும்.



**முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக்குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக்நாதன், தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளி பகுதிநேர ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத்தலைவர் ஜலீல் முகைதீன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நேரில் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.**

# பிரதமர் மோடிக்கு ஓமன் நாட்டின் உயரிய விருது

**ஓமன், டிச. 20-**

பிரதமர் நரேந்திர மோடிக்கு ஓமன் நாட்டின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது.



ஜோர்டான், எத்தியோப்பியா பயணத்தை முடித்துக் கொண்ட பிரதமர் மோடி வளைகுடா நாடான ஓமனுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தியா - ஓமன் இடையேயான கடந்த 2023 நவம்பரில் தொடங்கிய தடையற்ற ஒப்பந்தப் பேச்சு வார்த்தை 2025 இல் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து இந்தியா - ஓமன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இருநாட்டுத் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்தியா-ஓமன் வர்த்தக உச்சி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய பிரதமர் மோடி, இந்த உச்சிமாநாடு இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளுக்கு ஒரு புதிய திசையையும் உத்வேகத்தையும் அளிப்பதாகவும், மாண்ட்வி மற்றும் மஸ்கட்டை அரபிக் கடலுக்கு அப்பால் இணைக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கடல்சார் மரபின் வாரிசுகளாக வர்த்தகத் தலைவர்கள் திகழ்வதாகவும் தெரிவித்தார். பிரதமர் மோடியில் பயணத்தையொட்டி, மத்திய வர்த்தகம், தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயலும் உச்சிமாநாட்டில் கலந்து கொண்டார். வர்த்தக உச்சி மாநாட்டில் இரு நாடுகளின் வர்த்தகத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கு முன்னதாக, ஓமன் தலைநகர் மஸ்கட்டில் உள்ள அல் பரக்கா அரண்மனையில் மன்னர் சுல்தான் ஹைதம் பின் தாரிக் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தார். ஓமன் நாட்டுக்கு வருகை தந்த பிரதமர் மோடிக்கு நாட்டின் உயரிய விருதான ‘ஓமனின் முதல்தர விருது தி ஃபர்ஸ்ட் கிளாஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஓமன்) வழங்கி மன்னர் சுல்தான் ஹைதம் பின் தாரிக் கௌரவப் படுத்தினார்.

இந்த விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட 29 ஆவது வெளிநாடுகளின் உயரிய விருதாகும். மேலும், ராணி எலிசபெத், நெதர்லாந்து ராணி மாக்ஸிமா, நெல்சன் மண்டேலா, பேரரசர் அகிஹிட்டோ மற்றும் ஜோர்டானின் மன்னர் அப்துல்லா ஆகியோருக்குப் பின்னர் பிரதமர் மோடிக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. மூன்று நாள் அரசுமுறைப் பயணத்தின் ஒருபகுதியாக நேற்று முன்தினம் எத்தியோப்பியா சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் மிக உயரிய விருதான ‘தி கிரேட் ஹானர் நிஷான்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### நாமக்கல்லில் ஆஞ்சநேயர் ஜெயந்தியை முன்னிட்டு

# ஒரு லட்சம் வடை மாலைகள் படைக்கப்பட்டு சிறப்பு பூஜை

**நாமக்கல், டிச. 20-**

நாமக்கல்லில் ஆஞ்சநேயர் ஜெயந்தியை முன்னிட்டு, சுவாமிக்கு 1 லட்சத்து 8 வடைகளால் தயார் செய்யப்பட்ட மாலைகள் சார்த்தப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடந்தன. அதிகாலை முதலே ஏராளமான பக்தர்கள் சுவாமி வழிபாடு. நண்பகலில் தங்கக் கவச அலங்காரத்தில் சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

நாமக்கல், மார்கழி மாதம் அமாவாசை திதியும் மூல நட்சத்திரமும் கொண்ட நன்னாளில் ஆஞ்சநேயர் அவதரித்தார். அதன்படி (19.12.2025) நேற்று ஆஞ்சநேயர் ஜெயந்தியை முன்னிட்டு, நாமக்கல்லில் உள்ள, பிரசித்தி பெற்ற ஆஞ்சநேயர் திருக்கோவிலில், ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முன்னதாக, அதிகாலையில் 4.00 மணிக்கு கோவிலின் நடை திறக்கப்பட்டு காலை 4.40 மணிக்கு ஆஞ்சநேயருக்கு 1 லட்சத்து 8 வடைகள் கொண்ட மாலைகள் சார்த்தப்பட்டன. சிறப்பு பூஜைகள் நடைபெற்று, தீபாராதனை காண்பிக்கப்பட்டது. ஆஞ்சநேயர் வடை பிரியர் என்பதால், வடை மாலை சார்த்தி அவரை வணங்குவது சிறப்பம்சமாகும். பல்வேறு பலன்களை தரும் என்பது ஐதீகம். தொடர்ந்து அருள்மிகு ஆஞ்சநேயருக்கு காலை 11.00 மணியளவில் சிறப்பு அபிஷேகம், ஆராதனை. இதில், எண்ணெய், சிகைக்காய், 5,008 லிட்., பால், தயிர், பஞ்சாமிர்தம், சந்தனம், இளநீர், தேன் உள்ளிட்ட பல்வேறு பொருள்களால் அபிஷேகம் நடைபெறும். வெற்றிலை மாலை அணிவித்து சொர்ண அபிசேகம்., பின்னர், துளசி, ரோஜா, மல்லிகை, தாமரை உள்ளிட்ட பல்வேறு நறுமணமிக்க மலர்கள் கொண்டு சிறப்பு பூஜைகளும், தீபாராதனையும் நடைபெறும்.



18 அடி உயர ஆஞ்சநேயருக்கு பகல் 1.00 மணிக்கு, உடல் முழுவதும் தங்கக் கவசம் சார்த்தப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார். மாலையில், ஆஞ்சநேயருக்கு புதிய முத்தங்கி அலங்காரம். நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் கோவிலில் அனுமன் ஜெயந்தி விழா பக்தி சிரத்தையுடன் வெகு சிறப்பாகவும் கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது. 1 இலட்சத்து 8 வடை மாலைகளாக அணிவிக்கப்பட்ட வடைகள் மற்றும் அன்னதானம் ஆகிய பிரசாதங்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.



அன்பழகன் பிறந்தநாளையொட்டி சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் சேகர்பாபு, எம்.எல்.ஏக்கள் பொன்முடி, தாயகம்கவி, ஜோசப்சாமுவேல், வெற்றியழகன் மற்றும் அன்பழகன் மகன் அன்புச்செல்வன் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.

### என்னை வளர்த்தெடுத்த ஆசான்:

# பேராசிரியர் அன்பழகனுக்கு முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி

**சென்னை, டிச. 20-**

என்னை வளர்த்தெடுத்த கொள்கை ஆசான்களில் ஒருவர் என்று பேராசிரியர் அன்பழகன் பிறந்தநாளை முன்னிட்டு தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், கட்சியின் தொடர் வெற்றிகளை பேராசிரியர் அன்பழகனுக்கு அஞ்சலியாக உரித்தாக்குகிறேன் என்றும் அவர் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

மறைந்த தி.மு.க. முன்னாள் பொதுச்செயலாளரும், பேராசிரியருமான க.அன்பழகனின் 103-வது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. இந்த நிலையில் பேராசிரியர் க.அன்பழகனின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- கழகம் எனும் கலத்தைப் புயல்கள் தாக்கியபோதெல்லாம் தலைவர் கலைஞரின் பக்கத் துணையாய் நின்று கரைநோக்கிச் செலுத்திய பேராசிரியர் பெருந்தகையின் பிறந்தநாள். என்னை வளர்த்தெடுத்த கொள்கை ஆசான்களில் ஒருவர். நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு புதிய உயரங்களை அடையவும் ஒவ்வொரு தருணத்திலும் அவரது நினைவு என்னை ஆட்கொள்ளத் தவறியதில்லை.

கொள்கை உறுதியும் கனிவும் நிறைந்த பேராசிரியர் பெருந்தகை ஊட்டிய திராவிட இனமான உணர்வோடு முன்செல்கிறேன், கழகத்தின் தொடர் வெற்றிகளையே அவருக்கு என் அஞ்சலியாக உரித்தாக்குகிறேன்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### சென்னை மாவட்டத்தில் மட்டும்

# வரைவு வாக்காளர் பட்டியலில் மூன்றில் ஒருவரது பெயர் நீக்கம்

**சென்னை, டிச. 20-**

சென்னையில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் மூன்றில் ஒருவரது பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி சென்னை மாவட்டத்தில் மொத்த வாக்காளர்கள் 40,04,694 பேரில் எஸ்.ஐ.ஆருக்கு பின் 14,25,018 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நவம்பர் 4-ம் தேதி தொடங்கியது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு, வீடாக சென்று படிவங்களை வழங்கினர். படிவங்களை பெறுவதற்கான சிறப்பு முகாம்களும் நடந்தது. தேர்தல் கமிஷன் 2 முறை வழங்கிய கால அவகாசம் கடந்த 14-ம் தேதியுடன் முடிவடைந்தது. தமிழ்நாட்டில் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை 100 சதவீதம் வழங்கி, அவற்றை திரும்ப பெற்று உள்ளனர். பெரும்பாலான படிவங்களை வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் ஏற்கனவே பதிவேற்றம் செய்து விட்டனர். இந்த சூழலில், எஸ்.ஐ.ஆர். பணிகளை தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்ட படிவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று மாலை 5.30 மணிக்கு வெளியாக உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. அதன்படி, சென்னை மாவட்டத்திற்கான வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதில், சென்னை மாவட்டத்தில் மொத்த வாக்காளர்கள் 40,04,694 பேரில் எஸ்.ஐ.ஆருக்கு பின் 14,25,018 பேர் நீக்கப்பட்டுள்ளனர். எஸ்.ஐ.ஆருக்கு முன் - 40,04 694, எஸ்.ஐ.ஆருக்கு பின் -25,79,676, நீக்கம் - 14,25,018. சென்னையில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் மூன்றில் ஒருவரது பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**சென்னை மாவட்ட விவரம்:**

1) வாக்காளர்களின் எண்ணிக்கை - 26,79,676.
2) இறந்த வாக்காளர்கள் - 1,56,555.
3) முகவரியில் இல்லாதவர்கள் 27,328.
4) குடி பெயர்ந்தோர் - 12,22,164.
5) இரட்டை பதிவுகள் - 18,772.
6) மொத்தம் நீக்கப்பட்டோர் 13,25,018.
7) ஆண்கள் - 12,47,690 பேர்.
8) பெண்கள் - 13,31,243 பேர்.
9) இதர பிரிவினர் - 743 பேர்.

### இரு அவைகளிலும் சாந்தி மசோதா நிறைவேற்றம்:

# தொழில்நுட்பத்துறையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்: பிரதமர் மோடி

**டெல்லி, டிச. 20-**

இந்தியாவில் முதன்முறையாக தனியார் நிறுவனங்கள் அணுமின் நிலையங்களைத் தொடங்க அனுமதிக்கும் சாந்தி மசோதா பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டதற்கு பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். இதன் மூலம் தொழில்நுட்பத்துறையில் மாபெரும் மாற்றம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் முதன்முறையாக தனியார் நிறுவனங்கள் அணுமின் நிலையங்களைத் தொடங்க அனுமதிக்கும் சாந்தி மசோதா புதன்கிழமை மக்களவையில் நிறைவேறிய நிலையில் நேற்று முன்தினம் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதி ஒப்புதலுக்கு பிறகு இந்த மசோதா சட்டமாகும்.

இந்நிலையில் இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் சாந்தி மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது, நமது தொழில்நுட்பத் துறைக்கு ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் தருணமாகும். இந்த மசோதா நிறைவேற ஆதரவளித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எனது நன்றிகள். செயற்கை நுண்ணறிவுக்கு ஊக்கமளிப்பது முதல் பசுமை உற்பத்திக்கு வழிவகுப்பது வரை, இது நாட்டிற்கும் உலகிற்கும் ஒரு தூய்மையான எரிசக்தி எதிர்காலத்திற்குத் தீர்க்கமான உந்துதலை அளிக்கிறது. இது தனியார் துறைக்கும் நமது இளைஞர்களுக்கும் ஏராளமான வாய்ப்புகளையும் திறந்துவிடுகிறது. இந்தியாவில் முதலீடு செய்வதற்கும், புதுமைகளைப் படைப்பதற்கும், கட்டமைப்பதற்கும் இதுவே மிகச் சரியான நேரம்!" என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையே எதிர்க்கட்சி எம்.பிக்கள், அணுசக்தி துறையை தனியார்மயமாக்குவதற்கு கவலை தெரிவித்தனர்.

# செவிலியர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்

### எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை, டிச. 20-**



செவிலியர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தி.மு.க. ஸ்டாலின் அரசு, 2021 சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது செவிலியர்களுக்கு அளித்த வாக்குறுதி எண் 356-ஐ நிறைவேற்றக்கோரியும், அ.தி.மு.க. அரசால் கொரோனா காலகட்டத்தில் பணியமர்த்தப்பட்டு, தற்போதைய தி.மு.க. அரசால் பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து செவிலியர்களுக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (18.12.2025) தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாடு சங்கத்தின் சார்பாக அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை சிவானந்தா சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு காவல்துறை போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சுமார் 1,000-க்கும் மேற்பட்ட செவிலியர்களை கைது செய்து அவர்களை பேருந்துகள் மூலமாக அழைத்துச் சென்று கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இறக்கிவிட்டனர்.

இறக்கிவிடப்பட்ட செவிலியர்கள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலேயே தங்களது கோரிக்கைகள் நிறைவேறாமல் கலையமாட்டோம் எனக்கூறி தி.மு.க. அரசுக்கு எதிரான கோஷங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து, தி.மு.க. அரசின் காவல்துறை அவர்களை மீண்டும் கைதுசெய்து அருகிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

2021 சட்டமன்றத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி கடந்த நான்கரை ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் செவிலியர்களை உடனடியாக விடுவிப்பதுடன், 2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது தி.மு.க. அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# செவிலியர் பணிக்கு காலி இடங்கள் தற்போது இல்லை: அமைச்சர் தகவல்

**சென்னை, டிச. 20-**

செவிலியர் பணிக்கு தற்போது காலி பணியிடங்களே இல்லாத நிலை உள்ளது. காலி இடங்கள் இருந்தால் மட்டுமே பணி வழங்க முடியும் என்று அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவித்தார். தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் எம்.ஆர்.பி. செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை சிவானந்தா சாலையில் நேற்று முன்தினம் 500-க்கும் மேற்பட்ட எம்.ஆர்.பி. நர்சுகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த நர்சுகள் கலந்து கொண்டு கோரிக்கை பதாகைகளை ஏந்தியவாறு, தமிழக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்களை கலைந்து செல்லுமாறு போலீசார் மாலையில் அறிவுறுத்தினார்கள். ஆனால் கலைந்து செல்ல மறுத்ததால் போராட்டத்தில் ஈடுபட்ட 550 பேரை போலீசார் கைது செய்து பஸ்களில் ஏற்றினர். பின்னர் அவர்களை கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இறக்கி விட்டு சொந்த ஊர்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தினர். ஆனால் செவிலியர்கள் அங்கேயும் போராட்டத்தில் ஈடுபட்டதால் பேருந்து நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதைதொடர்ந்து போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்நிலையில் காலி இடங்கள் இருந்தால் மட்டுமே பணி வழங்க முடியும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், "காலி இடங்கள் இருந்தால் மட்டுமே பணி வழங்க முடியும். செவிலியர் பணிக்கு தற்போது காலி பணியிடங்களே இல்லாத நிலை உள்ளது. ஒப்பந்த செவிலியர்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் பணி நிரந்தரம் வழங்கப்படுகிறது. போராட்டம் நடத்துவது செவிலியர்களின் உரிமை. ஆனால் விதிமுறைகளை தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசு யாரையும் கைவிடாது. செவிலியர் பணியில் காலி இடங்கள் இருந்தால் மட்டுமே பணி வழங்க முடியும்" என்று அவர் கூறினார்.

# சேலத்தில் வருகிற 30-ம் தேதி த.வெ.க.வின் பொதுக்கூட்டம்?

### விரைவில் அறிவிப்பு வெளியாகிறது

**சேலம், டிச. 20-**



ஈரோட்டில் த.வெ.க. மக்கள் சந்திப்பு கூட்டம் வெற்றிகரமாக முடிந்ததை தொடர்ந்து அடுத்தகட்டமாக கொங்கு மண்டலத்தின் மற்றொரு மாவட்டமான சேலத்தில் இந்த மாதம் இறுதியில் (அதாவது 30-ம் தேதி) விஜய் பொதுக்கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அவரது கட்சி நிர்வாகிகள் மும்முரமாக செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கரூரில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ம் தேதி விஜய் பிரசாரம் செய்தபோது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்துக்கு பிறகு விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் த.வெ.க. தலைவர் விஜய் மீண்டும் எப்போது பிரசாரத்தை தொடங்குவார் என்று அவரது கட்சி தொண்டர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்தது.

இதனிடையே அ.தி.மு.க.வை சேர்ந்த முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் விஜய் முன்னிலையில் த.வெ.க.வில் இணைந்தார். இது தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து விஜய் கொங்கு மண்டலத்தில் கட்சியை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். இதனை தொடர்ந்து ஈரோட்டில் நேற்று முன்தினம் பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மத்தியில் விஜய் பேசினார்.

இதற்கிடையில், சேலத்தில் கடந்த 4-ம் தேதி விஜய் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்டு அவரது கட்சி நிர்வாகிகள் சேலம் மாநகர போலீஸ் கமிஷனரிடம் மனு கொடுத்தனர். ஆனால் கடந்த 3-ம் தேதி கார்த்திகை தீபம், கடந்த 6-ம் தேதி பாபர் மசூதி இடிப்பு தினம் என்பதால் போதிய பாதுகாப்பு அளிக்க முடியாது எனக்கூறி விஜய்யின் பிரசார கூட்டத்திற்கு போலீசார் அனுமதி மறுத்து விட்டனர்.

இந்நிலையில், ஈரோட்டில் த.வெ.க. மக்கள் சந்திப்பு கூட்டம் வெற்றிகரமாக முடிந்ததை தொடர்ந்து அடுத்தகட்டமாக கொங்கு மண்டலத்தின் மற்றொரு மாவட்டமான சேலத்தில் இந்த மாதம் இறுதியில் (அதாவது 30-ம் தேதி) விஜய் பொதுக்கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அவரது கட்சி நிர்வாகிகள் மும்முரமாக செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது, ஓமலூர், இரும்பாலை ரோடு, சேலம் சீலநாயக்கன்பட்டி பைபாஸ் ஆகிய 3 இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டம் நடத்துவதற்கான பணிகள் நடந்து வருவதாகவும், அதற்கான தேதி விரைவில் கட்சி தலைமையின் மூலம் அறிவிக்கப்பட உள்ளதாகவும், தேதி இறுதி செய்தவுடன் முறைப்படி போலீசில் அனுமதி கேட்டு மனு அளிக்க உள்ளதாகவும் சேலம் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் உறுதிப்பட தெரிவிக்கிறார்கள். சேலத்தில் விரைவில் விஜய் கூட்டம் நடத்த உள்ளதால் அவரது கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

### வி.பி.-ஜி ராம் ஜி மசோதாவுக்கு எதிர்ப்பு:

# பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் விடியவிடிய தர்னா



**புது டெல்லி, டிச. 19-**

வி.பி.-ஜி ராம் ஜி மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 12 மணி நேரம் தர்னா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தமிழ்நாட்டில் 100 நாள் வேலை திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த திட்டத்தின் பெயரில் இருந்து செயலாக்கம் வரை பல மாற்றங்களை அமல்படுத்தும் வகையில் ஒரு மசோதாவை மத்திய அரசு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

இதன்படி, இந்த திட்டத்துக்கு மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டு 'விக்சித் பாரத் ரோஜ்கர் அஜீவிகா மிஷன்' (கிராமின்) என பெயர் சூட்டப்பட்டு உள்ளது. வளர்ந்த பாரத வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார ஊரக உறுதி அளிப்பு திட்டம் என்ற பொருளில் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் இது 'வி.பி.-ஜி ராம் ஜி' திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த புதிய திட்டத்தில் சில பலன்களும் இருக்கிறது. வேலை வழங்கும் நாட்கள் 100-ல் இருந்து 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை இந்த திட்டத்துக்காக மத்திய அரசாங்கமே முழு தொகையையும் வழங்கிய நிலையில், மத்திய அரசாங்கம் 60 சதவீதமும், மாநில அரசுகள் 40 சதவீதமும் செலவழிக்க வேண்டும்.

இந்நிலையில், வி.பி.-ஜி ராம் ஜி மசோதா பாராளுமன்ற மாநிங்களவையில், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் நிறைவேறியது. இந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க., சி.பி.ஐ., ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் பாராளுமன்றத்தில் அமர்ந்து, கோஷங்களை எழுப்பியும், எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய அட்டைகளை கைகளில் ஏந்தியபடியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# எஸ்.ஐ.ஆர். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை பார்ப்பது எப்படி?

**சென்னை, டிச. 20-**

எஸ்.ஐ.ஆர். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை பார்ப்பது எப்படி என்பது குறித்த தகவல் வெளியாகியுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்ளவும் மேலும் ஒரு மாத கால அளவுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டனர். அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பிட்ட அளவில் வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். அதற்காக பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, சரியான முகவரியில் இருந்தவர்களை தவிர, உயிரிழந்தவர்கள், முகவரி மாற்றியவர்கள், கண்டுபிடிக்க முடியாதவர்கள் மற்றும் இரட்டை பதிவு வாக்காளர்கள், ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், வரைவு வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் உள்ளதா என்பதை சரிபார்ப்பது எப்படி என்ற விபரங்களை பின்வருமாறு பார்க்கலாம்:

1. voters.eci.gov.in அல்லது electoralsearch.eci.gov.in என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

2. உங்கள் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண்ணை உள்ளிடவும். உங்கள் பெயர், வயது மற்றும் தொகுதி போன்ற தனிப்பட்ட விவரங்களையும் உள்ளிடலாம்.

3. பின்னர் 'தேடல்' பொத்தானை அழுத்தி உங்கள் வாக்காளர் விவரங்களைக் காணலாம்.

4. இதில் உங்கள் பெயர் இருந்தால், வரைவு வாக்காளர் பட்டியலில் உங்களது பெயர் இருப்பதை நீங்கள் உறுதிசெய்துகொள்ளலாம் .

வரைவு வாக்காளர் பட்டியலில் உங்களது பெயர் இல்லையென்றால் என்ன செய்ய வேண்டும்.?

1) இருப்பினும் இந்த பட்டியலில் நீக்கப்பட்டதற்கான காரணங்கள் சரியில்லை என ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் ஜனவரி 18-ம் தேதி வரை தெரிவிக்கலாம்.

2) இடம் மாறியவர்கள் படிவம் 8, புதியதாக சேர்ப்பவர்கள் படிவம் 6 ஆகியவற்றை பூர்த்தி செய்து ஆவணங்களுடன் வழங்கி, வாக்காளர் பட்டியலில் ஜனவரி 18-ம் தேதிக்குள் இணைத்துக் கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்ளவும் மேலும் ஒரு மாத கால அளவுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 3) அடுத்த ஆண்டு (2026) பிப்ரவரி மாதத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் மட்டுமே 2026 சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்கவும், போட்டியிடவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிஜாப் சர்ச்சை: அரசு வேலையை உதறிய பெண்..!

**பாட்னா, டிச. 20-**

பீகார் ஹிஜாப் சர்ச்சையால் அரசு வேலையை வேண்டாம் என்ற புறக்கணித்த பெண் டாக்டர், பீகாரை விட்டு வெளியேறி பெற்றோர் வசிக்கும் கொல்கத்தா நகருக்கு சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது.


பீகாரில் சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று, 10-வது முறையாக நிதிஷ் குமார் முதல்-மந்திரியாக மீண்டும் பதவியேற்றார். இந்நிலையில், பாட்னா நகரில் கடந்த 15-ந்தேதி நடந்த அரசு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி ஒன்றில் அவர் நடந்து கொண்ட விதம் சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஹிஜாப் அணிந்திருந்த பெண் ஆயுஷ் டாக்டர் ஒருவருக்கு சான்றிதழை வழங்கிய போது, அவரிடம், ஹிஜாப்பை நீக்குங்கள் என சைகை காட்டினார். அந்த பெண் அதனை கவனித்து செயல்பட முற்படுவதற்கு முன், பெண்ணின் வாய், கன்னம் தெரியும்படி அந்த பெண்ணின் ஹிஜாப்பை பிடித்து, கீழே இழுத்து விட்டார். மேடையில் இருந்த சிலர் சிரித்தபோது, துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரி, அவரை தடுக்க முயற்சித்த வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த வீடியோ பரவியதும், காங்கிரஸ் மற்றும் ராஷ்டீரிய ஜனதா தள கட்சிகள் அவரை கடுமையாக சாடியுள்ளன. அவருடைய செயல் வெட்கக்கேடானது மற்றும் வெறுப்பூட்டுகிறது என்றும் காங்கிரஸ் சாடியது. இந்த நிலையில், நுஸ்ரத் பர்வீன் என்ற அந்த பெண் டாக்டர் இன்று (சனிக்கிழமை) அரசு வேலையில் சேரவிருந்த சூழலில், பீகார் அரசு வேலையில் சேருவதில்லை என அவர் முடிவு செய்துள்ளார் என தகவல் தெரிவிக்கின்றது.


இதுபற்றி நுஸ்ரத்தின் சகோதரர் செய்தியாளர்களிடம் கூறும்போது, அவர் முற்றிலும் வெறுத்து விட்டார். இந்த சம்பவத்தில் அவர் கேவலப்படுத்தப்பட்டு உள்ளார். பீகார் அரசு வேலையில் அவர் சேரமாட்டார் என கூறினார். அது அவருடைய தவறு இல்லை என நாங்கள் எடுத்து கூறி அவரை சமரசப்படுத்த முயற்சித்து வருகிறோம். ஒரு சிலரின் செயலுக்காக, அவர் ஏன் பதவியை கைவிட வேண்டும்? என கேட்டுள்ள அவர், ஆனால் மனதளவில் பெரிய பாதிப்பை அடைந்திருக்கிறார். அதனால், வேலையில் அவர் சேரமாட்டார் என கூறினார். இந்நிலையில், பீகாரை விட்டு வெளியேறி பெற்றோர் வசிக்கும் கொல்கத்தா நகருக்கு நுஸ்ரத் சென்று விட்டார் என தகவல் தெரிவிக்கின்றது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




திருப்பரங்குன்றம் விவகாரம் மதப் பிரச்னை அல்ல; அது ஈகோ பிரச்னை. இந்த விவகாரத்தில் நீதிபதியையே குற்றம் சாட்டுவது தவறான போக்கு. திருப்பரங்குன்றம் தூண் குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன. முருகன் இரண்டு வாழ்க்கை வாழ்ந்ததாக சிலர் பேசுகிறார்கள். அது தவறு.

**- தமிழிசை**




20 ஆண்டுகால மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை (எம்.ஜி.என்.ஆர்.இ.ஜி.ஏ) ஒரே இரவில் மோடி அரசாங்கம் தகர்த்துவிட்டது. இந்த திட்டம் உரிமைகள் அடிப்படையிலான, தேவைக்கேற்ப வழங்கப்படும் உத்தரவாதங்களை அழித்து, மாநிலங்களுக்கும், கிராமங்களுக்கும் எதிரானது.

**- ராகுல் காந்தி**



தமிழக வரலாற்றை வருங்கால சந்ததிகளுக்கும் கொண்டு செல்ல அந்த பகுதி மன்னர்கள் மற்றும் சுதந்திர போராட்ட வீரர்கள் பெயரை நகராட்சி துறை புதிதாக அமைய உள்ள பேருந்து நிலையங்களுக்கு சூட்ட அறிவிப்புகளை வெளியிட வேண்டியது அவசியம் ஆகும். இதை தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

**- ராமதாஸ்**



கோரிக்கைகளை வலியுறுத்தி போராடிய செவிலியர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்கள் அனைவரையும் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிப்பதோடு, அவர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திய நியாயமான கோரிக்கைகளை ஏற்க சுகாதாரத்துறையையும், தமிழக அரசையும் முன்வர வேண்டும்.

**- டி.டி.வி.தினகரன்**

# ரூ.100 கோடி மதிப்புள்ள நிலத்தில் அரசு விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும்: அதிமுக கவுன்சிலர் டி.சத்தியநாதன் கோரிக்கை



**சென்னை டிச 20-**

வளசரவாக்கம் மண்டலக் குழுக் கூட்டத்தில் 23 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட நிலையில், அதன்பின் பேட்டியளித்த அதிமுக கவுன்சிலர் சத்தியநாதன் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

சென்னை மாநகராட்சி வளசரவாக்கம் 11வது மண்டல அலுவலகத்தில் வார்டுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. மண்டலக்குழு தலைவர் நொளம்பூர் ராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் திமுக, அதிமுக ,அமமுக கவுன்சிலர்கள் கலந்து கொண்டு தங்கள் பகுதியில் உள்ள குறைகளை முன்வைத்தனர். அத்துடன் மண்டலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக விவாதங்கள் நடைபெற்றன. பின்னர் அனைத்து கவுன்சிலர்கள் சார்பில் ஒரு மனதாக 23 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய 145வது வார்டு அதிமுக கவுன்சிலர் சத்தியநாதன், மண்டலக்குழு கூட்டத்தில் மக்கள் பிரச்சனையை பற்றி பேசாமல் அரசியல் பேசுவதாக குற்றம்சாட்டினார். அத்துடன் 145வது வார்டு பகுதியில் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்து சுமார் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள 5 கிரவுண்ட் இடம்மீட்கப்பட்டிருப்பதாகவும், அந்த இடம் அரசுக்கு சொந்தமான இடம் என 2021ஆம் பெயர் பலகை வைக்கப்பட்டதாகவும், ஆனால் தற்போது வரை அந்த இடம் பயன்படுத்தப்படாமல் இருப்பதாக கூறினார். தங்கள் பகுதி மக்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தும் மாநகராட்சி தரப்பில் நடவடிக்கை எடுப்பதில்லை என்று தெரிவித்தார்.




**சென்னை திருவொற்றியூர் காலடிப்பேட்டை சாத்தாங்காடு செயின்ட் பால்ஸ் மகாஜன் மேல்நிலைப் பள்ளியில் மாணவ,மாணவிகளுக்கு சென்னை மாநகராட்சியின் 12 வது வட்ட மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் வீ.கவிகணேசன், திமுக செயலாளர் க.வீ.சதீஷ்குமார் முன்னிலையில் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை ஜான்சன் மற்றும் தலைமை ஆசிரியை சில்வியா தலைமையில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும் மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி. சங்கர் வழங்கினார்.**



**சென்னை திருவொற்றியூர் மண்டலம் 7 வது வட்டத்திற்கு உட்பட்ட கே.ஜி.அவென்யூ பகுதி பொது மக்கள் கோரிக்கை ஏற்று புதிய மின்மாற்றி அமைப்பதற்கு அதிமுக மாமன்ற உறுப்பினர் டாக்டர் கே.கார்த்திக் ஏற்பாடு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அதிமுக வட்ட செயலாளர்கள் எம்.கண்ணன், எஸ்.ஸ்டிபன் பொன்.செல்வம், டபிள்யு. எட்வின், சுப்பிரமணியம், ரஞ்சித் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.**



**சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடந்தது. இதில் துணை மேயர் மகேஷ்குமார், ஆணையர் குமரகுருபரன், நிலை குழு தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.**



**சென்னை அம்பத்தூர் காமராஜர் மேல்நிலைப்பள்ளியில் 8 பள்ளிகளை சேர்ந்த மாணவ,மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இதில் மேயர் ஆர்.பிரியா, மண்டல குழு தலைவர் ஜோசப் சாமுவேல், சுகாகாதார குழு தலைவர் சாந்துகுமாரி, மண்டல குழு தலைவர் மூர்த்தி கலந்து கொண்டனர்.**

# மது போதையில் நண்பர்களுக்குள் மோதல்: ஒருவர் கைது

**சென்னை டிச 20-**

சென்னை, எஸ்.எம்.நகர், பல்லவன் சாலை பகுதியில் வசித்து வரும் சந்தோஷ், கடந்த 15. ந் தேதி அன்று இரவு, திருவல்லிகேணி, ஆதாம் மார்கெட் அருகிலுள்ள தனியார் லாட்ஜில் அவரது நண்பர் ராஜேந்தின் என்பவருடன் மது அருந்தி கொண்டிருந்த போது, ராஜேந்திரன் சந்தோஷின் மனைவியை பற்றி தவறாக பேசியபோது, இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், வாக்குவாதம் முற்றிய நிலையில், ராஜேந்திரன் என்பவர் சந்தோஷை தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கி அருகிலிருந்த கட்டையை எடுத்து சந்தோஷை தாக்கிவிட்டு, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், இரத்த காயமடைந்த சந்தோஷ், ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருவதாகவும், மேற்படி சம்பவம் குறித்து சந்தோஷ் கொடுத்த புகாரின்பேரில், போலீசார் விசாரணை மேற்கொண்டனர். மேற்படி எதிரி ராஜேந்திரன், என்பவரை கைது செய்தனர்.

# திமுக அரசுப்பொறுப்பேற்றதற்கு பிறகு சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் 20,000 இருதய இடையீட்டு சிகிச்சைகள், 500 ரோபோடிக் அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடந்துள்ளது

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



**சென்னை,டிச.20**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் *(19.12.2025)* சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு இதுவரை 20,000 இருதய இடையீட்டு சிகிச்சைகள், 500 ரோபோடிக் அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடத்துள்ளதையொட்டி, மருத்துவ பயனாளர்களை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து, அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவக் குழுவினருக்கு பாராட்டுக்களை தெரிவித்தார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் தொடர்ச்சியாக பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற வளாகமாக கட்டமைத்ததை அனைவரும் நன்றாக அறிவீர்கள். அதற்கு பின்னர் வந்த அரசு மருத்துவமனையாக மாற்றினார்கள் என்றாலும் பல்வேறு சிறப்பு துறைகள் இன்றி ஒரு மருத்துவமனையாக மாற்றப்பட்டது. மருத்துமனையாக மாற்றப்பட்ட நாள் முதல் தினந்தோருமான புற மருத்துவப் பயனாளிகளின் எண்ணிக்கை 500 முதல் 700 வரை இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்கு பிறகு, பல்வேறு வகையான பன்னோக்கு சிகிச்சை துறைகள் தொடர்ச்சியாக தொடங்கி வைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களால் பன்னோக்கு மருத்துவமனையில் 2022 மார்ச் திங்கள் 15 ஆம் தேதி மேம்படுத்தப்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சை மையம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. ரூ.34.60 கோடி மதிப்பிலான ரோபோடிக் கருவி இந்தியாவில் உள்ள 36 மாநிலங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் எங்கேயும் இல்லாத ஒன்று.

தமிழ்நாட்டில் 5 தனியார் மருத்துவமனைகளில் உள்ளது நம்முடைய மாநில அரசு மருத்துவமனையில் 2022 மார்ச் திங்கள் 15 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. அந்த மேம்படுத்தப்பட்ட ரோபோட்டிக் அறுவை சிகிச்சை மையம் இன்றைக்கு சீறுநீரக அறுவை சிகிச்சை, புற்றுநோய் அறுவை சிகிச்சைகள், நாளம்மில்லா சுரப்பி அறுவை சிகிச்சைகள், இருதய அறுவை சிகிச்சைகள், இரைப்பை குடல் அறுவை சிகிச்சைகள் போன்றவைகள் ரோபோடிக் முறையில் 3டி பார்வை மூலம் உடல் உறுப்புகள் தெளிவாக தெரியும் வகையில் அவற்றின் மூலம் அறுவை சிகிச்சைகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. சிறிய அளவிலான சிகிச்சை தழும்புகள் மட்டுமே ஏற்படுவதால் பயனாளர்கள் நீண்ட நாட்கள் மருத்துவமனைகளில் தங்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ரோபோடிக் அறுவை சிகிச்சை இயந்திரத்தை பயற்சி பெற்ற மருத்துவர்கள் பயன்படுத்தி இங்கே பாராட்டுக்களை பெற்றுள்ள மருத்துவ பெருமக்கள் இதுவரை திறந்து வைக்கப்பட்ட நாள்வரை சற்றேறப்பம் 2.5 ஆண்டு காலத்தில் 500 அறுவை சிகிச்சைகள் சிறப்பாக நடத்தப்பட்டு மகத்தான சாதனை படைத்துள்ளார்கள். ரூ.20 இலட்சம் வரை செலவாகின்ற இந்த பலன் ஏழை எளிய மக்களுக்கு, பாதிப்பு உள்ளானவர்களுக்கு இன்றைக்கு அரசின் சார்பில் விலையில்லாமல் செய்யப்பட்டு அவர்கள் உயிர்கள் பாதுகாக்கப்படுகிறது.

இந்த மருத்துவமனை வளாகத்தில் 2014 இல் இருதயவியல் துறை தொடங்கப்பட்டதற்கு பிறகு இங்கே மேற்கொள்ளபட்டு வருகின்ற சிகிச்சைகள் குறிப்பாக இன்றைக்கு உலகம் முழுவதும் கோவிட் பேரிடருக்கு பிறகு இருதயவியல் நோய் பாதிப்புகள் என்பது அதிகரித்து வருவதை நாம் நன்றாக அறிவோம். இளம் வயதினரும் கூட இருதயவியல் நோய் பாதிப்புகளுக்கு உள்ளாகி உலகம் முழுவதும் உயிர் இழப்பதை நாம் நன்றாக அறிவோம். WHO ICMR என்கிற நிறுவனங்கள் இதுகுறித்தான ஆராய்ச்சிகளை கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் இந்த மருத்துவமனைக்கு ஒவ்வொரு நாளும் சுமார் 500 பேர் வரை இருதய சிகிச்சைகளுக்கு வருகிறார்கள். தற்போது இந்த மருத்துவமனையில் தினந்தோறும் சுமார் 2500 பேர் வரை மருத்துவ பயனாளர்கள் வருகை புரிந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இருதயவியல் துறையைப் பொறுத்தவரை இருதய ஓட்டைகளை அடைத்தல், அடைப்புகளை நீக்குதல், ஸ்டன்ட் பொறுத்துதல், ஆஞ்சியோகிராம் செய்தல், இருதய வால்வு பொறுத்துதல், பைபாஸ் சர்ஜரி, இருதய மாற்று அறுவை சிகிச்சை என்று தொடர் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் கடந்த 4.5 ஆண்டுகளில் மட்டும் 20,000 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். ஆகையால் இச்சிகிச்சையினை திறம்பட வழங்கிய மருத்துவக் குழுவினர்களுக்கு இத்துறையின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் 73 வயதுள்ள ஒருவருக்கு பெருந்தமணியின் அடிப்பகுதியில் ஏற்பட்ட கிழிவு அறுவை சிகிச்சையின்றி தோல் நுழைவு கருவி மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. இந்த சிகிச்சைக்கு தனியார் மருத்துவனைகளுக்கு சென்றிருந்தால் ரூ.10 இலட்சம் வரை செலவாகி இருக்கும். இந்த மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு உலகிலேயே முதன்முறையாக இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

# சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் வெளியீடு

**சென்னை டிச 20-**

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு, இதற்கான வரைவு வாக்காளர் பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.குமரகுருபரன், நேற்று வெளியிட்டார்.சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல், 01.01.2026 ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு சிறப்பு தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இதற்கான வரைவு வாக்காளர் பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையர் ஜெ.குமரகுருபரன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று ரிப்பன் கட்டட அலுவலகத்தில் வெளியிட்டார்.பின்னர் செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையர் தெரிவித்ததாவது: இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணியில், கணக்கெடுப்பு பணி நிறைவுற்று வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.இந்த வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களிலும் (பெருநகர சென்னை மாநகராட்சியின் 4, 5, 6, 8, 9, 10, 13 ஆகிய மண்டல அலுவலகங்களில் உள்ள வாக்காளர் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களில்), மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் தங்கள் குடும்பத்தில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் குறித்த விவரங்களை சரிபார்த்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

# சென்னை கோயம்பேடு பகுதியில் பெயிண்டரிடம் கத்தியைக்காட்டி மிரட்டி பணம் பறித்த ரவுடி கைது

**சென்னை டிச 20-**

சென்னை, கோயம்பேடு, சின்மயா நகர் பகுதியில் வசித்து வரும் பாபு, என்பவர் பெயிண்டராக வேலை செய்து வருகிறார். இவர் நேற்று முன் தினம் கோயம்பேடு, காளியம்மன் கோயில் தெரு சந்திப்பு அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு வந்த அறிமுகமான மாஞ்சா (எ) மஞ்சுநாதன் என்பவர் பணம் கேட்டுள்ளார். பாபு பணம் கொடுக்க மறுக்கவே ஆத்திரமடைந்த மாஞ்சா (எ) மஞ்சுநாதன் கத்தியைக்காட்டி மிரட்டி பாபுவிடமிருந்து ரூ.100 ஐ பறித்துக்கொண்டு தப்பிச்சென்றார். இது குறித்து பாபு கோயம்பேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கோயம்பேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி மாஞ்சா (எ) மஞ்சுநாதன், என்பவரை நேற்றுமுன் தினம் கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் மாஞ்சா (எ) மஞ்சுநாதன் வில்லிவாக்கம் காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 4 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி மாஞ்சா (எ) மஞ்சுநாதன் விசாரணைக்குப் சிறையில் அடைக்கப்பட்டார்.

# திருவொற்றியூர் ஆகாஷ் மருத்துவமனையில் இலவச பொதுமருத்துவ சிகிச்சை முகாம்



**.திருவொற்றியூர். டிச20**

வடசென்னையில் பிரசித்தி பெற்ற திருவொற்றியூர் ஆகாஷ் மருத்துவமனையில் பொது மருத்துவ இலவசசிகிச்சை முகாம்நடைபெற்றது.இந்த முகாமில் மூலநோய் ஆசனவாய் வெடிப்பு பவுத்திரம் பைலோனிடல் சைனஸ் குடலிறக்கம் பித்தப்பை கற்கள் குடல் வால் விரை வீக்கம் தைராய்டு கட்டிகள் மார்பக கட்டிகள்புற்றுநோய் கட்டிகள் கருப்பை கட்டி வயிறு குடல் சம்பந்தமான பிரச்சனைகள் ஆகிய நோய் களுக்கு பரிசோதனையுடன் சிகிச்சை வழங்கப் பட்டது.

இதற்கான பரிசோதனைகளை பொது மற்றும் லேபராஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணரும்மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் ஏ.செல்வராஜகுமார் மற்றும் கருவுறுதல் ஆலோசனை நிபுணர் மற்றும் உயர் ஆபத்து மகப்பேறு மருத்துவர் டாக்டர் பிரியா லட்சுமணன் ஆகியோர் பரிசோதனை செய்தனர். இந்த முகாம் கடந்த 18ஆம் தேதியிலிருந்து 21 ஆம் தேதி வரை 4 நாட்கள்நடைபெற்று வருகிறது.

# மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த இரு வழக்குகளில் 8 பேர் கைது

**சென்னை டிச20-**

சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று முன் தினம் காலை, திருவல்லிக்கேணி, பெல்ஸ் ரோடு மற்றும் சி.என்.கே. ரோடு சந்திப்பு அருகே கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக போதைப்பொருள் வைத்திருந்த 1.சாருகேஷ், 2..ரோஷன்ராஜ், , 3.ரபிஜாக், 4.ஹரி கண்ணன், 5.ரித்திஷ்வர், ஆகிய 5 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 8.5 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன், 600 கிராம் கஞ்சா மற்றும் பணம் ரூ.1,070/- பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் தனிப்படையினர் மற்றும் திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து சேப்பாக்கம், விக்டோரியா ஹாஸ்டல் ரோட்டில் கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக போதைப்பொருள் வைத்திருந்த 1.நித்திஷ்குமார், 2.பிரமோத் மாதவன், 3.ரேயான், ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 5 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன், 500 கிராம் கஞ்சா மற்றும் பணம் ரூ.375ஐ பறிமுதல் செய்யப்பட்டது.மேற்கண்ட 2 வழக்குகளிலும் கைது செய்யப்பட்ட மொத்தம் 8 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# சாஸ்திரி நகர் பகுதியில் உடல் வலி நிவாரண மாத்திரைகள் விற்பனை: 3 பேர் கைது

**சென்னை டிச 20-**

சென்னை சாஸ்திரி நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், நேற்று முன் தினம் சாஸ்திரிநகர், ஊரூர்குப்பம் உடைந்த பாலம் அருகே கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த 3 பேரை விசாரணை செய்து, அவர்களை சோதனை செய்தபோது, அவர்கள் உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் கஞ்சாவை மறைத்து வைத்து விற்பனை செய்துகொண்டிருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த எதிரி 1.குபேந்திரன் (எ) குபி (எ) விஜய், 2.கோகுல் (எ) 3.பிரசன்னா (எ) பப்லு, ஆகிய மூவரை செய்தனர். அவரிடமிருந்து 1,040 எண்ணிக்கைகள் கொண்ட உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் ¼ கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி குபேந்திரன் மீது 3 குற்ற வழக்குகளும், கோகுல் மீது 7 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# பிரபல ரவுடி நாகேந்திரனின் உறவினர் உட்பட 3 பேர் கைது

**சென்னை டிச 20-**

சென்னை வியாசர்பாடி சத்தியமூர்த்திநகர் 7வது பிளாக்கில் வசித்து வருபவர் தமிழரன் என்ற தம்பிதுரை (40). இவரது தம்பி தமிழழகன் (39) சரித்திர பதிவேடு ரவுடியான இவர்கள் இருவரும் பிரபல ரவுடி நாகேந்திரனின் அக்கா பாளையத்தின் மகன்கள். ஆம்ஸ்ட்ராங் கொலைக்கு பிறகு நாகேந்திரன் உறவினர்கள் வீடுகளில் போலீசார் சோதனை செய்தபோது 51 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டது.இந்த வழக்கில் நாகேந்திரனின் உறவினர்களான தமிழரசன் மற்றும் தமிழழகன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டனர்.

அதன்பின் ஜாமீனில் இருவரும் வெளியில் வந்தனர். இவர்கள் இருவரும் நாகேந்திரனின் பெயரை சொல்லி வியாசர்பாடி பகுதியில் மாமூல் வசூலிப்பதாகவும், வியாபாரிகளை மிரட்டுவதாகவும் புளியந்தோப்பு துணை கமிஷனர் முத்துக்குமாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்படி வியாசர்பாடி இன்ஸ்பெக்டர் சரவணன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று இருவரையும் கைது செய்தனர். இவர்களிடமிருந்து ஒன்றரை கிலோ கஞ்சா மற்றும் ஒரு கத்தி பறிமுதல செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவர் மீதும் வழக்குபதிவு செய்த போலீசார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: விவசாயிகளிடமிருந்து மனுக்களைப் பெற்று கலெக்டர் ச.கந்தசாமி குறைகளைக் கேட்டறிந்தார்



ஈரோடு டிச.20-

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 733.44 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 19.12.2025 முடிய 584.335 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 100.36 அடியாகவும், 29.01 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது. நடப்பாண்டில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்வதற்காக நெல் விதைகள் 63.3 மெட்ரிக் டன்;, சிறுதானியங்கள் 20.6 மெட்ரிக் டன்;, பயறுவகைகள் 47.7 மெட்ரிக் டன், எண்ணெய் வித்துக்கள் 55.3 மெட்ரிக் டன்; இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களான யூரியா 5393 மெட்ரிக் டன்;, டி.ஏ.பி 2098 மெட்ரிக் டன், பொட்டாஷ் 4254 மெட்ரிக் டன்; மற்றும்; காம்ப்ளக்ஸ் 7426 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. நடப்பு பருவத்திற்கு தேவையான இடுபொருட்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளன. மேலும், உர விற்பனையாளர்கள் மானிய உரங்களை விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டுக்கு விற்பனை செய்தால் அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும். விவசாயிகள் கேட்கும் உரங்களை மட்டுமே வழங்க வேண்டும் பிற உரங்களை வாங்க கட்டாயப்படுத்தக் கூடாது. உர விற்பனை முனையத்தின் மூலம் மட்டுமே உரங்கள் பட்டியலிடப்பட வேண்டும்.

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் இவற்றைப் பெற்று பயன் பெறலாம். மேலும் விவசாயிகளுக்குத் தேவையான பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் பயனாளிகள் வரும் காலங்களில் தொடர்ந்து தொகை பெற தனித்துவ விவசாய அடையாள எண் அவசியம் என மத்திய அரசு உறுதியாக தெரிவித்துள்ளது. விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொண்டோ அல்லது பொது சேவை மையத்தின் மூலமாகவோ தங்களது ஆதார் எண், சிட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுடன் சென்று உடனடியாக பதிவு செய்து தனித்துவ விவசாய அடையாள எண் பெறலாம். எனவே, பி.எம்.கிசான் தவணை தொகை தொடர்ந்து கிடைத்திட இதுநாள் வரை தனித்துவ விவசாய அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள எண்ணுக்கு பதிவு செய்ய வேண்டும்.

மேலும் கால்நடைத்துறையின் மூலம் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் கோமாரி நோய் தடுப்பூசி வருகிற 29.12.2025 முதல் 19.01.2026 வரை 21 நாள்கள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு மூலம் விளம்பரம் மேற்கொண்டு 2,88,650 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

தொடர்ந்து வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்; குறித்து வேளாண்மை துணை இயக்குநரால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட வாழை, தென்னை மற்றும் மஞ்சள் ஆகிய விளை பொருட்களின் மதிப்பு கூட்டு பொருட்கள் குறித்த கண்காட்சி மற்றும் அக்மார்க் திட்டம் குறித்த விழிப்புணர்வு கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

இன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர், விவசாயிகளிடமிருந்து 55 கோர்pக்கை மனுக்கள் பெற்று மேல் நடவடிக்கைகாக உரிய அலுவலர்களிடம் வழங்கினார்.

இக் கூட் டத் தில்; மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், வேளாண்மை இணை இயக்குநர் இரா.சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சி.லோகநாதன், ஈரோடு வேளாண் விற்பனைக்குழு செயலாளர் திருமதி.சாவித்திரி, கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் கந்தகுமார், கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை), செயற்பொறியாளர், நீர்வளஆதாரத்துறை, ஈரோடு மற்றும் பவானிசாகர் அணை கோட்டம் விவசாயிகள் மற்றும் விவசாய சங்கபிரதிநிதிகள்;, வருவாய்துறை அலுவலர்கள், தமிழ்நாடு மின்சாரவாரிய அலுவலர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் மற்றும் பிறதுறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஐ.நா.சபையில் இந்தியா தனது மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்கு அறிக்கையை சமர்ப்பிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## பாராளுமன்றத்தில் கே.இ.பிரகாஷ் கேள்வி



ஈரோடு, டிச. 20-

ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் டெல்லியில் நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்று பல்வேறு கேள்விகளை எழுப்பி வருகிறார். அதன்படி கே. இ பிரகாஷ் எம்.பி. பாராளுமன்றத்தில் பேசினார். அப்போது அவர் கூறும்போது,

ஐ.நா.மன்றத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியா தனது மூன்றாம் கட்ட காலநிலை மாற்ற இலக்கு அறிக்கையை சமர்ப்பி க் க வேண்டியுள்ளது. இது குறித்த முக்கிய விவரங்களை கேட்டு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கேள்விகள் முன்வைத்தேன்.வழக்கம்போல் ஆழமான தகவல்கள் எதுவும் இன்றி சம்பிரதாயமான பதில்களை அளித்துள்ளது மத்திய அரசு. குறிப்பாக இந்த இலக்கை அடைய பாரிஸ் ஒப்பந்தத்தின் படி வளர்ந்த நாடுகளிடம் இருந்து பெறப்பட வுள்ள நிதி பற்றி மூச்சு கூட விடாமல் தவிர்த்து உள்ளது. தற்போதைய அறிக்கை 2035 வரைக்குமான மூன்றாம் கட்ட காலநிலைமாற்ற இலக்குகளை அறிவிப்பது முதல் இரண்டு கட்டங்கள் 2015- 2030. 2020 2030. இதை சமர்ப்பிப்பதற்கான கெடு, இந்த ஆண்டு இறுதியோடு முடிவடைகிறது. ஆனால் இந்த அறிக்கையை இன்னும் இறுதி செய்யாமல் இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது. இதை நிர்வாக தாமதம் மட்டுமல்ல தனக்கு இருக்கும் பொறுப்பை தட்டிக் கழிக்கும் போக்கு. காலநிலை மாற்ற இலக்குகள் பெரும் நிதித்தொகை கொண்டு எட்டப்பட்ட வேண்டியவை. இது வளர்ந்து வரும் நாடுகளுக்கு நிதி சுமை ஏற்படுத்தும் என்பதற்காக, கால்நடை மாற்றத்திற்கு காரணமாக அமைந்த வளர்ந்த நாடுகள் நிதி அளிக்க வேண்டும் என்று பாரிஸ் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டது. இந்த தொகை இந்தியாவுக்கு நியாயப்படி வர வேண்டியது தற்போது மூன்றாம் கட்ட இலக்கியத்திற்கும் அது வரவேண்டும் இந்தத் தொகையாக எவ்வளவு நியமிக்கப்பட போகிறது என்ற கேள்வியை மத்திய அரசு தவிர்த்து உள்ளது மேலும் இப்படி பெறப்படும் தொகையை சரியாக திட்டங்களுக்கு செயல்படுத்துவதை கண்காணிக்க அமைப்புகளை உருவாக்குவதை பற்றியும் பதில் அளிக்க மறுத்துள்ளது. கிடை நெருங்கி வரும் காலநிலை மாற்ற இலக்குகள் குறித்த அறிக்கையை விரைவில் இறுதி செய்ய வேண்டும் அதில் வளர்ந்த நாடுகளிடம் இம்முறை கேட்கப் போகும் நிதி எவ்வளவு என்பது குறித்தும் நிலையில் மூன்றாம் கட்ட அவற்றை திட்டங்களுக்கு பயன்படுத்துவதை கண்காணிக் க ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்பு குறித்தும் மத்திய அரசு வெளிப்படையாக பேச வேண்டும். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட சூரியம்பாளையம் பகுதி செயலாளர் கே.சி.பழனிசாமி விருப்ப மனுவை சென்னை தலைமை கழகத்தில் அளித்தார்.

# தேசிய அளவிலான மேஜைப் பந்து போட்டி: தங்கம் வென்று கொங்கு கல்வி நிலைய மாணவி சாதனை

ஈரோடு டிச 20-

ஜம்முகாஷ்மீரில் நடைபெற்ற 69-வது இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டு குழுமம் (SGFI) தேசிய அளவிலான மேஜைப்பந்து போட்டியில் 19வயதுக்குட்பட்ட மாணவிகள் பிரிவில் ஈரோடு கொங்குகல்வி நிலைய மாணவி தீக்ஷா தமிழக அணிக்காக விளையாடி தங்கப்பதக்கம் வென்றார்.

பதக்கம் வென்ற மாணவியை கலெக்டர் கந்தசாமி பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்து நினைவு பரிசை வழங்கினார்.

மேலும் பள்ளியின் தலைவர் எம்.சின்னச்சாமி, தாளாளர் கே.செல்வராஜ், பொருளாளர் ஆர்.குணசேகரன், மற்றும் உதவித்தலைவர்கள்எஸ்.கே.சோமசுந்தரம், ஆர்.எம்.தெய்வசிகாமணி, இணைச் செயலாளர் டி.மீனாட்சிசுந்தரம், .வி.நாகராஜன், செயற்குழு உறுப்பினர்கள் இணைப் பொருளாளர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், முதல்வர் டி.நதியா அரவிந்தன் மாணவியை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.


மாண்பமை.சார்பு நீதிமன்றம்,
திருத்தணி
S.O.P NO. 1/2025

மரிய நான்சி த/பெ வில்லியம்ஸ் க/பெ அருண் .... மனுதாரர்

-எதிர்-

உயர்திரு.மேலாளர் அவர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து (விழுப்புரம்) கழகம், வேலூர் மண்டலம், வேலூர் .......எதிர்மனுதாரர்

மனுதாரர் மாண்பமை. திருத்தணி சார்பு நீதிமன்றத்தில் இறந்த அவரது அண்ணன் ஜெயபிரகாஷ் என்பவருக்கு வாரிசுரிமைச் சான்றிதழ் பெறுவதற்காக S.O.P NO. 1 / 2025 என்ற வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். யாருக்காவது ஏதேனும் ஆட்சேபணை இருந்தால், வரும் 9.1.2026 அன்று காலை 10:30 மணிக்கு இம்மாண்பமை நீதிமன்றத்தில் நேரில் அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி உங்கள் ஆட்சேபணைகளை பதிவு செய்யலாம் ஆட்சேபணை தெரிவிக்க தவறினால் வாரிசுரிமை சான்றிதழ் மனு ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

இப்படிக்கு
M. நவீன்குமார்
மனுதாரர் வழக்கறிஞர்



IN THE COURT OF SPL –I JUDGE SMALL CAUSES COURT AT CHENNAI
M.C.O.P.NO. 3970 OF 2025

1.Minor.Elamathi ....Petitioner

-Vs-

1.Jackson Enterprises,
2.The New India Assurance Co.Ltd. ....Respondents

To
Jackson Enterprises,
No,21,Thiruneermalai Main Road,
Kamarajapuram ,Anakapthur
Chengalpattu - 600070 ... 1 Respondent

Take notice that the above claim petition came up on 15.12.2025 before the Hon'ble SPL –I Judge Small Causes Court for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 19.01.2026. Ensure your presence before the said court on 19.01.2026 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which, the petition will be decided in your absence.

C.Thangaraju
Counsel for Petitioner


# சாக்லேட் திருவிழா: பார்வையாளர்களை கவர்ந்த நீலகிரி மலை போன்ற வடிவ 210 கிலோ சாக்லேட்



ஊட்டி, டிச.20-

கிருஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை வரவேற்கும் விதமாக ஊட்டி எம் அண்ட் என் சாக்லேட் ஸ்டோரி அருங்காட்சியகத்தில் சாக்லேட் திருவிழா நேற்று தொடங்கியது. ஜனவரி 4-ந் தேதி வரை நடைபெறவுள்ள சாக்லேட் திருவிழாவில் ஒரு கிலோ 60 ரூபாய் முதல் 10 ஆயிரம் வகையான 160 வகையான சாகலேட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஹோம் மேட் சாக்லெட் என்றால் அனைவரின் நினைவிற்கு வருவது ஊட்டி தான். அதற்கான இதமான காலநிலையும் இங்கு நிலவுவதால் தமிழகம் மற்றும் கேரளா மாநிலங்களில் சாகுபடி செய்யப்படும் கோகோ பழங்களில் இருந்து சேகரிக்கப்படும் கோகோ விதைகள் வரவழைக்கப்பட்டு அரைத்து அவற்றுடன் கோகோ பட்டர் மற்றும் கரும்பு சர்க்கரை சேர்த்து ஹோம் மேட் சாக்லெட் தயாரிக்கப்படுகிறது. இந்த சாக்லெட்டுகளை சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி உள்ளூர் மக்களும் அதிகம் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

இந்த நிலையில் ஊட்டியில் உள்ள எம் அண்ட் என் அருங்காட்சியகத்தில் ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டை வரவேற்கும் விதமாக சாக்லேட் திருவிழா நடத்தப்படுவது அதன்படி இந்தாண்டு 16-வது ஆண்டாக நடத்தப்படுகிறது. இது குறித்து இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்கள் அப்துல் ரகுமான், பசலூர் ரகுமான் ஆகியோர் தெரிவிக்கையில், இந்த ஆண்டு கிருஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை வரவேற்கும் விதமாக 15 நாட்கள் நடைபெறும் சாக்லெட் திருவிழா இன்று தொடங்கியுள்ளது. இதில் டார்க், மில்க், ஒயிட் என மூன்று ரகங்களில் பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை உள்ளிட்ட பொருட்களை கொண்டு 150 வகையான ஹோம் மேட் சாக்லேட்கள் காட்சிப்படுத்தபட்டுள்ளது.

குறிப்பாக இந்த ஆண்டின் சிறப்பு அம்சமாக சுற்றுலா பயணிகளை கவரும் விதத்தில் கேக்,தேயிலை,மிளகு,காளான் உள்ளிட்ட நீலகிரியில் கிடைக்கக்கூடிய பொருட்களை கொண்டு இனிப்பு,புளிப்பு,உவர்ப்பு,கசப்பு,காரப்பு,துவர்ப்பு ஆகிய அறுசுவைகளில் தயாரிக்கப்பட்ட சாக்லேட் வகைகள் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது. மேலும் 210 கிலோ சாக்லெட்டை கொண்டு நீலகிரி மலை போன்ற வடிவம் அமைக்கப்பட்டிருந்தது. ரூ.60 முதல் 10 ஆயிரம் வரை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பல வகையான சாக்லேட்டுகள் சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர் என்றனர்.


Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021. Ph: 044-25952015,9842165236
E-mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only


# நீலகிரியில் வரைவு வாக்காளர் பட்டியல்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டார்

## 56,091 வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கம்



ஊட்டி, டிச.20-

நீலகிரி மாவட்டத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026-ன் கீழ், வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்ஃமாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று (19.12.2025) வெளியிட்டார். இதில் 56,091 வாக்காளர்கள்; வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணைய அறிவுரையின் படி, சிறப்பு தீவிரத்; திருத்தம், 2026- ஆனது கடந்த 04.11.2025 முதல் தொடங்கியது. இந்த சிறப்பு தீவிர திருத்தத்தின் முதற்கட்டமாக தயார் செய்யப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலானது நேற்று 19.12.2025 (வெள் ளிக் கி ழ மை) அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிகளின் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

சிறப்பு தீவிர திருத்தம், 2026 - இன் போது, நீலகிரி மாவட்டத்தில் 27.10.2025 அன்றைய நிலையில் இருந்த மொத்த 5,89,167 வாக்களார்களுக்கும் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டது, இதில் 5,33,076 வாக்காளர்கள் கணக்கெடுப்பு படிவங்களை திரும்ப வழங்கியுள்ளனர். இவர்களில் 5,33,076 வாக்காளர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர் (ஆண்கள்: 2,54,759, பெண்கள்: 2,78,299 மற்றும் மூன்றாம் பாலினத்தவர்கள்: 18). திரும்ப பெறப்படாத கணக்கெடுப்பு படிவங்களில், கண்டறிய முடியாத வாக்காளர்கள் 5,863, நிரந்தரமாக இடம் பெயர்ந்த வாக்காளர்கள் 27,939, இறந்த வாக்காளர்கள் 18,975, இரட்டைப் பதிவுள்ள வாக்காளர்கள் 3,292 மற்றும் இதர வாக்காளர்கள் 22 என மொத்தம் 56,091 வாக்காளர்கள்; வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெ ற வில்லை. மேலும், வாக்காளர்கள்; 19.12.2025 முதல் 18.01.2026 வரை நடைபெறவுள்ள கால கட்டத்தில் உரிமைகோருதல் மற்றும் மறுப்புரை தெரிவித்தல் போன்றவற்றை, உரிய படிவங்கள் வாயிலாக தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தொடர்புடைய வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் சமர்ப்பிக்கலாம். மேலும், உரிமை கோரல் மற்றும் மறுப்புரை தெரிவித்தல் காலத்தில் மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம்கள் நடைபெறும்.மேலும், நீலகிரி மாவட்த்தில் வாக்குச்சாவடி மறுசீரமைத்தல் பணிக்கு முன்னதாக 690 வாக்குச்சாவடி மையங்கள் இருந்தன. வாக்குச்சாவடி மறுசீரமைத்தலின் போது புதிதாக 49 வாக்குச்சாவடி மையங்கள் உருவாக்கப்பட்டன. 03 வாக்குச்சாவடி மையங்கள் எற்கனவே இருந்த வாக்குச்சாவடி மையங்களுடன் இணைக்கப்பட்டன. வாக்குச்சாவடி மறுசீரமைத்தல் பணிக்கு பின்னர் தற்போது மொத்தம் 736 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. சிறப்பு தீவிர திருத்தம், 2026 பணிக்காக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிகளுக்கு மாவட்ட தேர்தல் அலுவலரால் நான்கு (4) முறை கூட்டம் நடத்தப்பட்டது. இதே போல் வாக்காளர் பதிவு அலுவலர்களாலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் பல்வேறு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இப்பணியில், 4,377 அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலர் மா. நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது) லோகநாயகி, அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டி ஆஞ்சநேயர் திருக்கோயிலில் அனுமன் ஜெயந்தி மஹோற்சவ விழா கோலாகலம்

## ரத்தின அங்கி அலங்காரத்தில் அருள்பாலித்தார்

ஊட்டி, டிச.20-

ஊட்டி பழைய அக்ரஹாரம் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயிலில் நேற்று நடைபெற்ற அனுமன் ஜெயந்தி மஹோற்சவ விழாவில் ரத்தின அங்கி அலங்காரத்தில் அனுமன் சாமி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

மார்கழி மாதம் அமாவாசை தினத்தன்று பிறந்த அனுமன் சாமிக்கு நேற்று நாடு முழுவதும் உள்ள அனுமன் கோவில்களில் சிறப்பு அபிஷேக, அலங்கார பூஜைகள் நடைபெற்றன. அதே போன்று நீலகிரி மாவட்டம், ஊட்டி மார்க்கெட் அருகே பழைய அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயில். இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் இக்கோயிலில் நேற்று 19-ந் தேதி ஸ்ரீ அனுமன் ஜெயந்தி மஹோற்சவ விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு கடந்த 10-ந் தேதி சிறப்பு அபிஷேகத்துடன் விழா துவங்கியது. அன்று முதல் தினந்தோறும் விஷேச ஹோமங்கள் மற்றும் அபிஷேக அலங்கார பூஜைகள் நடைபெற்று வந்தன. அப்;போது ஆஞ்சநேயருக்கு தினந்தோறும் காலை 9 மணிக்கு விசேஷ ஹோமம் மற்றும் விசேஷ பூஜையும், மாலை 6 மணியளவில் வெள;வேறு வகையான சிறப்பு அலங்காரத்துடன் விசேஷ பூஜைகள்; நடைபெற்று வந்தது. அதன்படி 11-ந் தேதி வாழைப்பழ அலங்காரத்திலும், 12-ந் தேதி வெண்ணெய் காப்பு அலங்காரத்திலும், 13-ந் தேதியன்று உலர்பழங்கள் அலங்காரத்திலும், 14-ந் தேதியன்னு வெற்றிலை சாத்து அலங்காரத்திலும் அனுமன் சாமி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தொடர்ந்து 15-ந் தேதியன்று ராஜமாருதி அலங்காரத்திலும், 16-ந் தேதி செந்தூர காப்பு அலங்காரத்திலும், 17-ந் தேதியன்று கனி அலங்காரத்திலும், 18-ந் தேதி திருமஞ்சன அலங்காரத்திலும் காட்சியளித்தார். விழாவின் முக்கிய நாளான நேற்று(19-ந் தேதி) ஸ்ரீ அனுமன் ஜெயந்தியன்று காலை 6.30 மணிக்கு விஸ்வரூப திருவாராதனம், தொடர்ந்து ரத்தின அங்கி அலங்காரத்திலும் பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அனுமன் சாமியை வழிபட்டனர். அதன்பின்னர் மாலை 3.00 மணிக்கு அனுமன் சாமி திருவீதி புறப்பாடு நிகழ்ச்சி நடைபெற்றது. கோவில் வளாகத்திலிருந்து ரதத்தில் புறப்படும் அனுமான் மணிகூண்டு, லோயர் பஜார், மின்வாரிய ரவுண்டானா, மெயின் பஜார், ஐந்துலாந்தர், எம்.எஸ். லைன், காபிஹவுஸ் வழியாக மீண்டும் கோவிலை வந்தடையும், அப்போது வழிநெடுகிலும் பக்தர்கள் ஆஞ்சநேயருக்கு பூஜைகள் கொடுத்து வழிபட்டனர்.ஏற்பாடுகளை திருக்கோயில் செயல் அலுவலர் வீரக்குமார், அர்ச்சகர்கள் ஹரி கிருஷ்ணன், முராஹரி, திருக்கோயில் பணியாளர்கள் சிறப்பான செய்திருந்தனர்.

ஊட்டி புது அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ள வேணுகோபால சுவாமி கோயிலில் ஆஞ்சநேயருக்கு சிறப்பு திருமஞ்சன அபிஷேகம் நடைபெற்று 1008 வடை மாலை அலங்காரம் செய்யப்பட்டது.


தமிழ்நாடு அரசு
ஏத்தாப்பூர் முதல்நிலை பேரூராட்சி, சேலம் மாவட்டம்

ந.க.எண்: 176/2025/அ1 மின்னனு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு நாள். 18.12.2025

2025-2026-ம் ஆண்டு 15வது நிதி ஆணைய சுகாதார மானிய திட்டத்தின் கீழ் கீழ்காணும் பணி மேற்கொள்ள இரண்டு உறைகள் (Two Cover system) கொண்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வேலை விபர அட்டவணை

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய தொகை முன் வைப்புத் தொகை (ரூபாயில்) (Only for Civil Works) | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்திரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Construction of New Building to UPHC Yethapur Attur HUD in Yethapur Townpanchayat, Salem District. | 150.00 | 3,00,000/- | Class -I | 365 நாட்கள் |

1) செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் தகுதியான ஒப்பந்தாரர்களிடமிருந்து மின்னனு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. 2) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். 3) மின்னனு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 4.முக்கிய தினங்கள் | அ) ஒப்பந்தப்புள்ளி நமூனா இறக்கம் செய்தல் | 18.12.2025 காலை 10.00 மணி முதல் 06.01.2026 மாலை 3.00 மணி |
| | ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 06.01.2026 மாலை 3.00 மணி வரை |
| | இ) ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 06.01.2026 பிற்பகல் 3.30 மணி |

5) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.
6) ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை ஏத்தாப்பூர் பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

தலைவர்,
ஏத்தாப்பூர் பேரூராட்சி மன்றம், சேலம் மாவட்டம்

செ.ம.தொ.இ / 6756 / ஒப்பந்தப்புள்ளி / 2025

செயல் அலுவலர் (பொ)
ஏத்தாப்பூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம்.



ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within THREE months thereafter.I,,NITHYA SANKARAN, D/o.K.SANKARAN, Aged 35 years, Permanently residing at, NO-207/1, RAM NAGAR, NORTH EXTN, MAIN ROAD, 2ND CROSS STREET, VELACHERY CHENNAI, CHENNAI-600042. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu, Bar Council Buildings High Court Campus , Chennai - 104. Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.

NITHYA SANKARAN



BEFORE THE HON'BLE VI ASSISTANT CITY CIVIL COURT AT CHENNAI
I.A. No. 02 of 2025 in
O.S.No.5736 of 2025

K.Sathyanarayan ...Petitioner/Plaintiff

Vs

V.Rajesh and 1 other ... Respondents/Defendants

NOTICE THROUGH PUBLICATION FOR 1ST AND 2ND RESPONDENTS

To,
1. V. Rajesh, S/o. Viswanathan, No. 32, Sha Avenue, 3rd Street, Rajakizhpakkam, Tambaram, Chennai - 600073.
2. R. Gayathri, W/o. Rajesh, No. 32, Sha Avenue, 3rd Street, Rajakizhpakkam, Tambaram, Chennai - 600073.

The Hon'ble VI Assistant City Civil Court at Chennai, ordered notice to you by way of Paper Publication on 17.12.2025 and returnable by 27.01.2026 in the above matter filed by the Petitioner/Plaintiff herein. You are hereby informed to appear before the Hon'ble VI Assistant City Civil Court, Chennai, either in person or through counsel on 27.01.2026 and submit your objections, if any, failing of which, the case will be heard and decided in your absence in accordance with law.

R. VENKATESAN
Counsel for Petitioner



BEFORE THE HON'BLE VI ASSISTANT CITY CIVIL COURT AT CHENNAI
O.S.No.5736 of 2025

K.Sathyanarayan Plaintiff

Vs

V.Rajesh and 1 other ... Defendants

NOTICE THROUGH PUBLICATION FOR 1ST AND 2ND DEFENDANTS

To,
1. V. Rajesh, S/o. Viswanathan, No. 32, Sha Avenue, 3rd Street, Rajakizhpakkam, Tambaram, Chennai - 600073.
2. R. Gayathri, W/o. Rajesh, No. 32, Sha Avenue, 3rd Street, Rajakizhpakkam, Tambaram, Chennai - 600073.

The Hon'ble VI Assistant City Civil Court at Chennai, ordered notice to you by way of Paper Publication on 17.12.2025 and returnable by 27.01.2026 in the above matter filed by the Plaintiff herein. You are hereby informed to appear before the Hon'ble VI Assistant City Civil Court, Chennai, either in person or through counsel on 27.01.2026 and submit your objections, if any, failing of which, the case will be heard and decided in your absence in accordance with law.

R. VENKATESAN
Counsel for Plaintiff



BEFORE THE COURT OF XVI ADDL.CITY CIVIL COURT AT CHENNAI
O.S.NO. 8547 OF 2019

CANARA BANK
(Formerly Syndicate Bank)
Rep. by its Senior Branch Manager,
PERAVALLUR BRANCH,
Door No.56, SRP Koil Street (North),
Opp. To Thiru Vi ka Nagar Bus Terminus
Thiru Vi Ka Nagar, Peravallur,
Chennai 600 082. ... PLAINTIFF

- Vs-

1. Mr. T. JEEVARAJ, Son of Mr. T. Arogyam, Presently Residing at, Door No. 17, Sakthi Avenue, Perumal Pattu, Vepampattu, Chennai 602 024.
2. Mr. M.H. ABUSALI, Son of Mr. Mohamed Haniff, Door No.12, Palayakara Street, Ayanavaram, Chennai 600 023.
3. Mrs. T. VANI, Wife of Mr. T. Jeevaraj, Door No. 17, Sakthi Avenue, Perumal Pattu, Vepampattu, Chennai 602 024. ... DEFENDANTS

Please take notice that the above case is filed by the Plaintiff against all of you for recovery of loan amount before the HON'BLE XVI ADDL.JUDGE CITY CIVIL COURT AT CHENNAI and the Hon'ble court was pleased to order notice to second of you returnable by 03.02.2026. Please make it convenient to appear before the above said court on 03.02.2026 at 10.30 AM either in person or through counsel failing which the above matter will be decided in your absence.

K.A.Mahendira Kumar
Counsel for Plaintiff

டி-20 உலகக்கோப்பை தொடர்:

# இந்திய அணி இன்று அறிவிப்பு




**மும்பை, டிச. 20-**
டி-20 உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணி தேர்வுக் குழு தலைவர் அகர்கர் தலைமையில் இன்று ஆலோசனை நடைபெற்ற பிறகு இன்று இந்திய அணி அறிவிக்கப்பட உள்ளது.

**20 அணிகள் பங்கேற்பு...**
நடப்பு சாம்பியன் இந்தியா உள்பட 20 அணிகள் பங்கேற்கும் 10-வது ஐ.சி.சி. டி-20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை இந்தியா, இலங்கை இணைந்து நடத்துகின்றன. அடுத்த ஆண்டு (2026) பிப்ரவரி 7-ம் தேதி தொடங்கி மார்ச் 8-ம் தேதி வரை இந்த போட்டி நடக்கிறது. இதில் நடப்பு சாம்பியன் இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, முதல் முறையாக தகுதி பெற்றுள்ள இத்தாலி உள்பட 20 அணிகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்-8 சுற்றுக்கு தகுதி பெறும்.

**அகர்கர் தலைமையில்...**
ஒரு மாதத்திற்கு முன்பே உலகக் கோப்பை தொடருக்கான தங்களது அணியை முன்கூட்டியே ஒவ்வொரு கிரிக்கெட் வாரியமும் சமர்பிக்க வேண்டும் இந்த நிலையில், டி-20 உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்பட உள்ளது. அதன்படி தேர்வுக் குழு தலைவர் அகர்கர் தலைமையில் இன்று ஆலோசனை நடைபெற உள்ளது. ஆலோசனையில் இந்திய அணி தலைமை பயிற்சியாளர் காம்பிரும் பங்கேற்க உள்ளார். ஆலோசனை நிறைவடைந்த பிறகு இந்திய அணி அறிவிக்கப்பட உள்ளது.

**இந்திய போட்டி அட்டவணை:**

1) இந்தியா - அமெரிக்கா: பிப்ரவரி 7 (மும்பை).
2) இந்தியா - நமீபியா: பிப்ரவரி 12 (டெல்லி).
3) இந்தியா - பாகிஸ்தான்: பிப்ரவரி 15 - (கொழும்பு ).
4) இந்தியா - நெதர்லாந்து : பிப்ரவரி 18 (அகமதாபாத் ).

ஐ.சி.சி. டெஸ்ட் சாம்பியன்ஷிப்:

# உலக சாதனை படைத்த கான்வே - லதாம் ஜோடி

**மவுன்ட் மாங்கானு, டிச. 20-**
ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் வரலாற்றில் அதிக ரன் குவித்த தொடக்க ஜோடி என்ற உலக சாதனையை கான்வே - லதாம் இணை படைத்துள்ளது.



**நிதான ஆட்டம்....**
நியூசிலாந்து - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையிலான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மவுன்ட் மாங்கானுவில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டாஸ் ஜெயித்து முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கேப்டன் டாம் லதாம், கான்வே களமிறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே நிதானமாகவும், அதேநேரத்தில் நேர்த்தியாகவும் ஆடி வலுவான அடித்தளம் அமைத்தனர். அபாரமாக ஆடிய கான்வே 147 பந்துகளில் தனது 6-வது சதத்தை எட்டினார்.

**புதிய சாதனை....**
மறுமுனையில் டாம் லதாம் 183 பந்துகளில் தனது 15-வது சதத்தை பூர்த்தி செய்தார். அணியின் ரன் எண்ணிக்கை 86.4 ஓவர்களில் 323 ரன்களாக உயர்ந்தபோது தொடக்க ஜோடி பிரிந்தது. லதாம் 137 ரன்னில் கேட்ச் ஆனார். இதன் மூலம் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் வரலாற்றில் அதிக ரன் குவித்த தொடக்க ஜோடி என்ற உலக சாதனையை கான்வே - லதாம் இணை படைத்துள்ளது.

**சாதனை பட்டியல் விவரம்:**

1. கான்வே & லதாம் - 323 ரன்கள்.
2. ரோகித் & மயங்க் - 317 ரன்கள்.
3. அபித் & ஷான் மசூத் - 278 ரன்கள்.
4. ஷபிக் & இமாம் உல் ஹக் - 252 ரன்கள்.
5. கிராலி & பென் டக்கெட் - 233 ரன்கள்.

டிராவிஸ் ஹெட் அபார சதம்:

# 356 ரன்கள் முன்னிலையுடன் வலுவான நிலையில் ஆஸி.,

**அடிலெய்டு, டிச. 20-**
டிராவிஸ் ஹெட்டின் அபார சதத்தால் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 3-வது போட்டியில் 356 ரன்கள் முன்னிலையுடன் ஆஸ்திரேலிய அணி வலுவான நிலையில் உள்ளது.

**326 ரன்கள்...**
ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 3-வது போட்டி அடிலெய்டில் தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி முதல் நாள் முடிவில் முதல் இன்னிங்சில் 83 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 326 ரன்கள் அடித்திருந்தது. மிட்செல் ஸ்டார்க் 33 ரன்னுடனும், நாதன் லயன் ரன் ஏதுமின்றியும் களத்தில் இருந்தனர். விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி 106 ரன்களில் ஆட்டமிழந்தார்.

**2-வது நாள் ஆட்டம்....**
இந்த சூழலில் 2-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 371 ரன்களில் ஆல் அவுட் ஆனது. ஸ்டார்க் 54 ரன்களில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 5 விக்கெட்டுகளை அள்ளினார். இதனையடுத்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. தொடக்க ஆட்டக்காரர் ஆனா ஜாக் கிராலி 9 ரன்களிலும், அடுத்து வந்த போப் 3 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த பென் டக்கெட் 29 ரன்களிலும், ஜோ ரூட் 19 ரன்களிலும் அவுட்டாகினர்.

**காப்பாற்ற போராட்டம்...**
ஆஸ்திரேலிய அணியின் சிறப்பான பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இங்கிலாந்து திணறியது. இந்த இக்கட்டான சூழலில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் - ஹாரி புரூக் ஜோடி சேர்ந்து அணியை காப்பாற்ற போராடினர். 56 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. புரூக் 45 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜேமி ஸ்மித் 22 ரன்களிலும், வில் ஜாக்ஸ் 6 ரன்களிலும், பிரைடன் கார்ஸ் ரன் எதுவுமின்றியும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். பின்வரிசையில் களமிறங்கிய ஜோப்ரா ஆர்ச்சர் கேப்டன் ஸ்டோக்சுடன் கைகோர்த்து அணிக்கு வலு சேர்த்தார். இந்த ஜோடி சிறப்பாக ஆடி இங்கிலாந்து அணி 200 ரன்களை கடக்க உதவியது.

**சிறப்பாக விளையாடி...**
இங்கிலாந்து அணி 2-வது நாள் முடிவில் முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுகளை இழந்து 213 ரன்கள் அடித்துள்ளது. ஸ்டோக்ஸ் 45 ரன்களுடனும், ஆர்ச்சர் 30 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இன்று 3-வது நாள் ஆட்டம் நடைபெற்றது. ஸ்டோக்ஸ், ஆர்ச்சர் இருவரும் தொடர்ந்து சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தனர். ஸ்டோக்ஸ் அரைசதமடித்தார். சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஸ்டோக்ஸ் 83 ரன்களில் வெளியேறினார். மறுபுறம் நிலைத்து விளையாடி ஆர்ச்சர் அரைசதமடித்தார். அவர் 51 ரன்களில் வெளியேறினார். இறுதியில் இங்கிலாந்து அணி 286 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால் 85 ரன்கள் ஆஸ்திரேலியா முன்னிலை பெற்றது. ஆஸ்திரேலியா சார்பில் கம்மின்ஸ் , போலந்த் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

**வலுவான நிலையில்...**
தொடர்ந்து 2வது இன்னிங்சில் விளையாடிய ஆஸ்திரேலியா அணி 3வது நாள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 271 ரன்கள் எடுத்துள்ளது. இதன் மூலம் ஆஸ்திரேலியா 356 ரன்கள் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது. ஆஸ்திரேலியா சார்பில் அபாரமான பேட்டிங்கை வெளிப்படுத்திய டிராவிஸ் ஹெட் சதமடித்து அசத்தினார். மேலும் அலெக்ஸ் கேரி அரைசதமடித்தார். ஹெட் 142 ரன்கள், கேரி 52 ரன்கள் எடுத்து களத்தில் உள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஜெர்மனி முன்னாள் பிரதமருடன் ராகுல்காந்தி சந்தித்து பேச்சு



**பெர்லின், டிச. 20-**
6 நாட்கள் பயணமாக ஜெர்மனி சென்றுள்ள ராகுல் காந்தி அங்கு ஜெர்மனி முன்னாள் பிரதமரை சந்தித்து பேசினார்.
6 நாட்கள் பயணமாக காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி ஜெர்மனி சென்றுள்ளார். அவர் கடந்த 15-ம் தேதி டெல்லியில் இருந்து ஜெர்மனி புறப்பட்டு சென்றார். ஜெர்மனியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் ராகுல் காந்தி பங்கேற்றுள்ளார். பேர்லினின் காங்கிரஸ் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்று வருகிறார்.
இந்நிலையில், ஜெர்மனி முன்னாள் பிரதமர் ஓலாப் ஸ்கால்ஸ் ராகுல் காந்தி நேற்று சந்தித்தார். இந்த சந்திப்பின் போது அரசியல் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். இதனை தொடர்ந்து ராகுல் காந்திக்கு ஓலாப் ஸ்கால்ஸ் மதிய விருந்து அளித்தார்.

100 நாள் வேலை திட்ட விவகாரம்:

# வரும் 24-ம் தேதி தி.மு.க. கூட்டணி கட்சிகள் மாபெரும் ஆர்ப்பாட்டம்

**சென்னை, டிச. 20-**
100 நாள் வேலை திட்ட விவகாரத்தில் வரும் 24-ம் தேதி மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" மாநிலத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றியங்களிலும் 100 நாள் வேலைவாய்ப்பினால் பயன்பெறுவோரைத் திரட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது, வேலைநாட்களை குறைப்பது, பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, 'கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு' என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது, இந்தியை திணிப்பது என சட்டத்தை திருத்தியும் - நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்கத் துடிக்கும் மத்திய பா.ஜ.க. அரசின் நாசகார சதிச் செயலையும் - அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அ.தி.மு.கவையும் கண்டித்தும், சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் 24.12.2025 (புதன்கிழமை) அன்று காலை 10 மணியளவில், தலைநகர் சென்னையிலும் - மாநிலத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றியங்களிலும் 100 நாள் வேலை வாய்ப்பினால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்டச் செயலாளர்கள் – நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் – மாநில நிர்வாகிகள் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் - மத்திய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து கூட்டணி அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில், மாவட்ட கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு மக்களை வஞ்சிக்கும் மத்திய பாசிச பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முழக்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாதனைப் பட்டியலில் கேரி

**ஆ**ஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 371 ரன்களுக்கு ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் 286 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. 85 ரன்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி, மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 271 ரன்கள் எடுத்துள்ளது. ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்தைக் காட்டிலும் 356 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. டிராவிஸ் ஹெட் 142 ரன்களுடனும், அலெக்ஸ் கேரி 52 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.
முதல் இன்னிங்ஸில் சதம் விளாசிய அலெக்ஸ் கேரி, இரண்டாவது இன்னிங்ஸில் அரைசதம் கடந்து விளையாடி வருகிறார். இதன் மூலம், ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஒரு போட்டி ஒன்றின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் அரைசதம் கடந்த 4-வது விக்கெட் கீப்பர் பேட்டர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். ஆஷஸ் டெஸ்ட் போட்டி ஒன்றின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் அரைசதம் கடந்த 3-வது ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் என்ற பெருமையும் அலெக்ஸ் கேரியைச் சேரும்.

## உ.பி. கிரிக்கெட் சங்கம் உறுதி

**இ**ந்தியா-தென் ஆப்பிரிக்கா அணிகள் இடையே லக்னோவில் நடைபெற இருந்த 4-வது டி20 போட்டி கடும் பனிமூட்டம் காரணமாக ரத்து செய்யப்பட்டது. ஆடுகளத்தை நடுவர்கள் 6 முறை ஆய்வுசெய்த பிறகே போட்டியை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் கைவிட்டனர். 7 மணிக்கு இந்த போட்டி தொடங்கவேண்டும். ஆனால் இரவு 9.25 மணி வரை நடுவர்கள் ஆட்டத்தை நடத்த முடியுமா என ஆய்வு செய்தனர். ஆனால் கடும் பனி நிலவியதால் போட்டியை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலை இல்லை என்பதால் போட்டி ரத்து செய்யப்பட்டது.
போட்டி கைவிடப்பட்டதால் நீண்ட நேரமாக காத்திருந்த ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர். இதுகுறித்து பிசிசிஐ மீது கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. போட்டி நடக்காததால் டிக்கெட்டுக்கு உரிய பணத்தை திரும்ப வழங்குவது இந்திய கிரிக்கெட் வாரியமா அல்லது உத்தர பிரதேச கிரிக்கெட் சங்கமா என்பதில் குழப்பம் ஏற்பட்டது. ஆனால் டிக்கெட்டுக்கு உத்தர பிரதேச கிரிக்கெட் சங்கமே முழு பொறுப்பு என கிரிக்கெட் வாரியம் கூறியது. இந்நிலையில் ஆன்லைன் மூலம் டிக்கெட்டுகளைப் பெற்ற ரசிகர்களுக்கு அதற்குரிய பணம் அதே வழியில் திரும்ப வழங்கப்படும். அது தொடர்பான விவரங்கள் டிக்கெட் வைத்திருப்பவர்களுக்கு அவர்களது இ-மெயில் மூலம் தகவல் தெரிவிக்கப் படும் என உத்தர பிரதேச கிரிக்கெட் சங்க செயலாளர் பிரேம் மனோகர் குப்தா தெரிவித்தார்.

கலசப்பாக்கம், அரக்கோணம் உள்ளிட்ட

# 3 தொகுதி தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

**தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைக்க அறிவுறுத்தல்**



**சென்னை, டிச. 20-**
கலசப்பாக்கம், அரக்கோணம் உள்ளிட்ட 3 தொகுதி தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நேரில் ஆலோசனை நடத்தினார். அப்போது தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைக்க வேண்டும் என்று அவர்களை அறிவுறுத்தினார்.
தமிழக சட்டசபை தேர்தல் வருகிற ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலையொட்டி தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் 'உடன் பிறப்பே வா' என்ற பெயரில் ஒவ்வொரு தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளை அண்ணா அறிவாலயத்துக்கு அழைத்து தொகுதி நிலவரங்களை கேட்டறிந்து வருகிறார்.
ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், மண்டல பொறுப்பாளர் ஆகியோரிடம் கட்சியின் நிலவரங்களை கேட்டு அறிகிறார். அதில் கட்சி நிர்வாகிகளுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளையும் அவர் சுட்டிக் காட்டி தேர்தல் வெற்றிக்காக கடுமையாக பாடுபட வேண்டும், உள்கட்சி விவகாரங்களை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று தெரிவித்து வருகிறார்.
கடந்த ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு சட்டசபை தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசித்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கலசப்பாக்கம், அரக்கோணம், சோளிங்கர் ஆகிய 3 சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட நிர்வாகிகளை தனித்தனியாக (ஒன் டு ஒன்) வரவழைத்து கள ஆய்வு மேற்கொண்டார். அப்போது தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அரசின் சாதனை திட்டங்களை மக்கள் மத்தியில் முனைப்புடன் கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். இதுவரை 49 நாட்களில் 112 சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து கள நிலவரங்களை கேட்டறிந்துள்ளார்.



**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் ரூ.43.53 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பூவிருந்தவல்லி மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்து, 214.50 கோடி ரூபாய் மதிப்பிலான பயணிகளின் தேவைக்கேற்ப உயரத்தை குறைக்கும் வசதி கொண்ட 45 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப்பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை தொடங்கி வைத்து பேருந்தில் பயணம் செய்தார். அருகில் அமைச்சர் சிவசங்கர் உள்ளார்.**

காந்தி பெயர் நீக்கத்திற்கு எதிர்ப்பு:

# பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் 2-வது நாளாக போராட்டம்




**புதுடெல்லி, டிச. 20-**
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பெயரிலிருந்து மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டதற்கும், புதிய திட்டத்தில் ஏழைகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்களுக்கும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று 2-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.
மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பெயரை மாற்றம் செய்து புதிய விதிகளை அறிமுகம் செய்யும் மசோதா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. இது ஜனாதிபதி ஒப்புதலுக்கு பின் இது அமலுக்கு வரும். மசோதாவின்படி இந்தத் திட்டத்திற்கு விக்சித் பாரத் ரோஜ்கர் மற்றும் ஆஜீவிகா மிஷன் (கிராமின்) என்று பெயரிடப்பட்டுள்ளது. இது சுருக்கமாக விபி ஜி ராம் ஜி என அழைக்கப்படுகிறது.
திட்டத்தின் பெயரிலிருந்து மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டதற்கும், புதிய திட்டத்தில் ஏழைகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்களுக்கும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. நேற்று முன்தினம் மசோதா தாக்கலின்போது எதிர்கட்சி எம்.பிக்கள் மசோதா நகலை கிழித்து எறிந்தனர். மேலும் நேற்று முன்தினம் இரவு முழுவதும் பல எம்.பிக்கள் பாராளுமன்ற வளாகத்தில் தர்ணா நடத்தினர்.
இந்நிலையில் குளிர்கால கூட்டத் தொடரின் கடைசி நாளான நேற்றும் பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பிரியங்கா காந்தி உள்ளிட்ட முக்கிய எதிர்காட்சி எம்.பிக்கள் பங்கேற்றனர்.
இதன்போது செய்தியாளர்களிடம் பேசிய பிரியங்கா காந்தி, "இந்த மசோதா மிகவும் ஏழ்மையான மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கப் போகிறது. ஏனென்றால், அசல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், அது வடிவமைக்கப்பட்ட விதத்தின்படி அதில் 90 சதவீதம் நிதியை மத்திய அரசு வழங்கியது. கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், மிகவும் ஏழைகளாக இருந்து வேலை வாய்ப்பு பெறுவதில் சிரமப்பட்ட மக்களுக்கு மிகப்பெரிய ஆதரவாகவும் இருந்தது.
கடந்த 20 ஆண்டுகளாக, இது ஏழை மக்களுக்கு, குறிப்பாக எதுவுமற்றவர்களுக்கு உதவிய ஒரு நல்ல திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இப்போது, இந்த மசோதாவின் புதிய வடிவத்தில், மத்திய அரசின் நிதியில் இருந்து ஒதுக்கீட்டை இவ்வளவு குறைக்கும்போது, மாநிலங்களால் அதைச் சமாளிக்க முடியாது. இதன் பொருள், அந்தத் திட்டம் செயலிழந்து விடும், அது மிகவும் தீங்கு விளைவிக்கும் என்பதே" என்று தெரிவித்தார்.




விருதுநகர் மாவட்டம் சிவகாசி ஊராட்சி ஒன்றியம் எம்.சொக்கம்பட்டி கிராமத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் புதிய அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியை சீனிவாசன் எம்.எல்.ஏ. முன்னிலையில் அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று திறந்து வைத்தார். உடன் திட்ட இயக்குநர் கேசவதாசன், சார் ஆட்சியர் முகமது இர்பான் ஆகியோர் உள்ளனர்.



திண்டுக்கல் தென் திருப்பதி கோவிலில் அனுமன் ஜெயந்தி முன்னிட்டு ஸ்ரீ சஞ்சீவி ஆஞ்சநேயர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.



திருப்பரங்குன்றம் மலையுச்சியில் உள்ள தீபத்தூணில் தீபமேற்ற உயர்நீதிமன்றமே உத்தரவிட்டும் அதனை செயல்படுத்த மறுத்ததை கண்டித்து, தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட மதுரை நரிமேடு பகுதியை சேரந்த பூர்ணசந்திரன் உடலுக்கு சரவணா மருத்துவமனை நிறுவனர் டாக்டர் பா.சரவணன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

### பரமக்குடியில் கேந்திரிய வித்யாலயா பள்ளி அமைக்க

# மத்திய கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து தர்மர் எம்.பி. வலியுறுத்தல்

**பரமக்குடி, டிச. 20-**



ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளியைத் தொடங்க வேண்டும் என இராமநாதபுரம் மாவட்டம் அஇஅதிமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். தர்மர் எம்பி மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தார். பரமக்குடி பகுதியில் கேந்திரிய வித்யாலயா பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட கால கனவாகும்.இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது ஆர்.தர்மர் எம்.பி. பேசினார்.

பரமக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மத்திய அரசு அலுவலகங்கள், ரயில்வே, தபால் துறை, பொதுத்துறை வங்கிகள் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த பணியாளர்கள் கணிசமான அளவில் வசித்து வருகின்றனர். அவர்களின் குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்க இப்பள்ளி அவசியமாகிறது.தற்போது கேந்திரிய வித்யாலயா பள்ளியில் பயில மாணவர்கள் மதுரை அல்லது இராமநாதபுரத்திற்கு தாண்டி நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது.பள்ளி அமைப்பதற்குத் தேவையான போதுமான நிலம் உள்ளூரிலேயே தயார் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை விரைந்து பரிசீலித்து அங்கீகரிக்க வேண்டும் என மத்திய கல்வி அமைச்சகத்தைக் கேட்டுக் கொண்டார்.

இந்த புதிய பள்ளியின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு சர்வதேச தரத்திலான கல்வி மிக எளிதாகக் கிடைக்கும் அதனால் இந்தத் திட்டத்தைப் பரிசீலித்து விரைவில் இதற்கான பரிந்துரைகளை மேற்கொண்டு,பள்ளியைத் தொடங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக மத்திய கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளதாக தர்மர் எம்.பி தெரிவித்தார்.

# அலங்காநல்லூர் தர்மசாஸ்தா ஆலயத்தில் 53-ம் ஆண்டு மார்கழி மாத உற்சவ விழா




**அலங்காநல்லூர், டிச.20 -**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தர்ம சாஸ்தா ஆலயத்தில் 53ம் ஆண்டு மார்கழி மாத உற்சவ விழா நடந்தது. இந்த திருவிழாவில் முதல் நாள் அபிஷேக ஆராதனைகளும் பால், பழம், பன்னீர் உள்ளிட்ட 16 வகை திரவியங்களாலும் பல வண்ண மலர்களாலும் சிறப்பு அர்ச்சனையும் அபிஷேகமும் நடந்தது.இரண்டாம் நாள் உலக மக்கள் நன்மை வேண்டியும், விவசாயம் செழிக்கவும், 1008 திருவிளக்கு பூஜை நடந்தது. நேற்று மூன்றாம் நாள் சிறப்பு அன்னதானமும், தொடர்ந்து இரவு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் வானவெடிகள் முழங்க தீவட்டி பரிவாரங்களுடன் ஐயப்பன் வீதி உலா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி ஏ.எல். சீனிவாசன் மற்றும் அலங்காநல்லூர் வட்டார ஐயப்ப முருக பக்தர்கள் செய்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பட்வில்லை அலங்காநல்லூர் போலீஸ்சார் செய்து இருந்தனர்

# திருமலைக்கேணியில் அமாவாசை தின விழா

**நத்தம், டிச. 20-**



திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோவிலில் மார்கழி மாத அமாவாசை தினவிழா நடந்தது.இதையொட்டி முருகபெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது.ராஜாங்க திருக்கோலத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். தொடர்ந்து மாலையில் சுவாமி புறப்பாடு நடந்தது.மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.பின்னர் பக்தர்களுக்கு அறுசுவை உணவு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதையொட்டி சுற்றுவட்டாரங்களிலிருந்தும் வெளி மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான முருகபக்தர்கள் கலந்துகொண்டு நெய்விளக்கேற்றி சுவாமி தரிசனம் செய்தனர். இதைப்போலவே குட்டூர்-அண்ணாமலையார் கோவில், நத்தம் மாரியம்மன் கோவில்களிலும் அமாவாசையை முன்னிட்டு சுவாமிகளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடந்தது. இங்கும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# நத்தத்தில் அனுமன் ஜெயந்தி விழா



**நத்தம், டிச. 20-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டியில் உள்ள வீர ஆஞ்சநேயர் கோவிலில் அனுமன் ஜெயந்தி விழா நடந்தது.இதையொட்டி கோவில் வளாகத்தில் யாகசாலை அமைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது.தொடர்ந்து அதிகாலை சுவாமிக்கு வடை மாலை, வெற்றிலை,துளசி மற்றும் எலுமிச்சை பழங்களால் அலங்காரம் செய்யப்பட்டு ராம,நாம பூஜைகளும்,16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது.

இதில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# சந்தனக்கருப்பு சுவாமி கோவிலில் அமாவாசை பூஜை

**நத்தம், டிச. 20-**



திண்டுக்கல் மாவட்டம் நத்தம் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள அரண்மனை சந்தனகருப்புசுவாமி கோவிலில் மார்கழி மாத அமாவாசை பூஜை விழா நடந்தது.இதையொட்டி சுவாமிக்கு வர்ண பூமாலைகளை அணிவித்து சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டு பால்,பழம், பன்னீர், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# கப்பலூரில் தோப்பூர் - கப்பலூர் இடையே உயர் மட்ட மேம்பாலம் அமைக்க கோரிக்கை

**திருமங்கலம், டிச. 20-**



மதுரை - திருமங்கலம் இடையிலான நான்கு வழிச் சாலையில் விபத்துக்களை தடுத்திடும் வகையில் கப்பலூர் சிட்கோ - கூத்தியார் குண்டு நான்கு வழிச் சாலை சந்திப்புகளில் ரூ.78 கோடியில் சுரங்கப்பாதை அமைத்திடும் திட்டங்களுக்கு மாற்றாக தோப்பூர் - கப்பலூர் ரிங் ரோடு சந்திப்பு இடையே உயர் மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும் என தமிழ்நாடு குடிமக்கள் நுகர்வோர் பாதுகாப்பு மையம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு குடிமக்கள் நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் நிறுவனர், மாநில தலைவர் டாக்டர் ஆர்.கர்ணன் விடுத்துள்ள கோரிக்கை மனுவில் : காஷ்மீர் முதல் கன்னியகுமரி வரையிலான தேசிய நெடுஞ்சாலையில் மதுரை தோப்பூரிலிருந்து கப்பலூர் ரயில்வே மேம்பாலம் வரை பாதசாரிகள் நடக்கக்கூடிய நடைமேடை இல்லாமலேயே நவீன கட்டமைப்பு இல்லாமல் சாலை அமைக்கப்பட்டு உள்ளது.மேலும் உயர்மட்ட பாலம் இல்லாததால் அடிக்கடி விபத்து மற்றும் உயிரிப்புகள் ஏற்படுகிறது. மதுரை தோப்பூர் முதல் கப்பலூார் இரயில்வே மேம்பாலம் இடையே ஏராளமான அரசு அலுவலகங்கள், குடியிருப்பு பகுதிகள், பள்ளி கல்லூரிகள், வணிக நிறுவனங்கள், தொழில் கூடங்கள் செயல்பட்டு வருகிறது.மேற்கண்ட தேசிய நெடுஞ்சாலை பகுதியில் நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான வாகனங்கள் அசுர வேகத்துடன் இயக்கப்படுவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகிறது. எனவே விபத்துக்களை தவிர்த்திடும் வகையில் தோப்பூர் முதல் கப்பலூர் மேம்பாலம் வரை உயர்மட்ட மேம்பாலம் கட்ட கோரிக்கை விடுத்திருந்தோம்.

ஆனால் அதற்கு மாறாக கூத்தியார்குண்டு சந்திப்பு மற்றும் கப்பலூர் சிட்கோ சந்திப்பு ஆகியவை ஏற்கனவே சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் விபத்து பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கூத்தியார் குண்டு,கப்பலூர் சிட்கோ சந்திப்புகளில் வாகன சுரங்கப்பாதை கட்டுவதற்காக ரூ.78 கோடியில் திட்டமிடப்பட்டு பணிகள் டெண்டர் விடும் கட்டத்தில் உள்ளது என தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பதில் கடிதம் அனுப்பியுள்ளது.ஏராளமான விபத்துக்கள் நடைபெறுகின்ற இந்த பகுதிகளில் நடைமுறைக்கு சாத்தியமற்ற மற்றும் மழை நீர் தேங்குதல் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்ற வகையிலான கப்பலூர் சிட்கோ, கூத்தியார் குண்டு ஆகிய சந்திப்புகளில் சுரங்கப்பாதை அமைத்திடும் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கைவிட வேண்டும். மேலும் அதற்கு மாறாக மதுரை - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் விபத்துக்களை முழுமையாக தவிர்த்திடும் வகையில் தோப்பூர் மேம்பாலம் முதல் கப்பலூர் ரிங் ரோடு சந்திப்பு மேம்பாலம் வரை உயர் மட்ட மேம்பாலம் அமைத்திட போதிய ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும்.மேம்பால திட்டமே விபத்துக்களை தடுத்திடுவதற்கு நிரந்தர தீர்வாக அமைத்திடும் என்பதால் தோப்பூர் மேம்பாலம் முதல் கப்பலூர் ரிங் ரோடு சாலை சந்திப்பு இடையே உயர் மட்ட மேம்பாலம் அமைத்திடும் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

### ராமநாதபுரம் மாவட்டத்தில்

# திருஉத்தரகோசங்கை ஆருத்ரா தரிசனம் ஜனவரி 2 விடுமுறை உள்ளூர் விடுமுறை

**ராமநாதபுரம், டிச. 20-**

ராமநாதபுரம் மாவட்டம் திருஉத்தரகோசமங்கை திருக்கோவில் ஆருத்ரா தரிசனம் வரும் 2-ம் தேதி நடைபெற உள்ளதால் அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை விடப்படுவதாக கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.


ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், திருஉத்திரகோசமங்கை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீமங்களநாதசுவாமி திருக்கோவிலில் ஆருத்ரா தரிசனம் திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு வருகிற 2-ம் தேதி அன்று வெள்ளிக்கிழமை ஒருநாள் மட்டும் ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறை விடப்படுகிறது. அதனை ஈடு செய்யும் பொருட்டு 10.01.2026 அன்று சனிக்கிழமை வேலை நாளாகவும் அறிவிக்கப்படுகிறது. மேலும், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களும் 10.01.2026 அன்று வழக்கம்போல் இயங்கும். இந்த உள்ளூர் விடுமுறை நாள் செலவாணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், 02.01.2026 வெள்ளிக்கிழமை அன்று ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கருவூலம், சார்நிலை கருவூலங்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களும் அரசு பாதுகாப்பிற்கான அவசர அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.



சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்கு போட்டியிட விருப்பம் தெரிவித்து மாநில எம்.ஜி.ஆர். இளைஞர்அணி துணைச்செயலாளர் மா.ஜெயபால் விருப்ப மனுவை முன்னாள் அமைச்சர் செம்மலையிடம் அளித்தார். அருகில் மதுரை மாநகர் மாவட்ட அம்மா பேரவை துணைச்செயலாளர் கே.எஸ்.சுப்பு, டி.கவிதாஸ் ஆகியோர் உள்ளனர்.



சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மதுரை மாநகர் தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு போட்டியிட விருப்பம் தெரிவித்து மாநகர் மாவட்ட மாணவர் அணி செயலாளர் ஏ.பார்த்திபன் முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா, கமலக்கண்ணன் ஆகியோரிடம் தனது விருப்ப மனுவை அளித்தார். அருகில் நிர்வாகிகள் பா.குமார், மார்க்கெட் மார்நாடு, ஓட்டுனர் அணி திருமுருகன், கவிச்செல்வம் ஆகியோர் உள்ளனர்.



சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மதுரை மாநகர் மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு போட்டியிட விருப்பம் தெரிவித்து முன்னாள் அமைச்சர் கோகுல இந்திரா, கமலக்கண்ணன் ஆகியோரிடம் மதுரை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளரும், 70-வது வட்ட அ.தி.மு.க. செயலாளருமான வழக்கறிஞர் பா.பாலமுருகன் மனு அளித்தார். அருகில் மாவட்ட பிரதிநிதி சி.ஆர்.கதிரவன் உள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, பேராசிரியர் க.அன்பழகனின் 103-வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். உடன் பேராசிரியர் க.அன்பழனின் மகன் அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான வெற்றியழகன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 43.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பூவிருந்தவல்லி மின்சாரப் பேருந்து பணிமனையை திறந்து வைத்து, 214.50 கோடி ரூபாய் மதிப்பிலான 45 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் சிவசங்கர், நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், மாவட்ட கலெக்டர் பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, சைதாப்பேட்டை, தமிழ்நாடு திறந்த நிலைப்பல்கலைக் கழகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் , மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் 16-வது நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் - முனைவர் அருள், மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவர்/இயக்குநர் பர்வீன் சுல்தானா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சென்னையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர், சமூக சீர்திருத்தத்துறையின் கீழ் இயங்கி வரும் சமூக நீதிக் கண்காணிப்புக்குழு நடத்திய சமூக நீதி நாள் 2025 - விழாவில், மாநில அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். இவ்விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சமூக நீதிக் கண்காணிப்புக்குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், எழுத்தாளர் மனுஷ்ய புத்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் வள்ளலார், சமூக நீதிக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



சேப்பாக்கம்,வேளாண்மைத்துறை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தலைமையில் கரும்பு விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையினை பரிசீலனை செய்து, கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில், சிறிய கரும்பு அறுவடை இயந்திரத்தை வடிவமைத்து, குறைந்த விலையில் வழங்குவது தொடர்பாக வேளாண்மைத் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பூந்தமல்லியில் மின்சாரப்பேருந்து பணிமனை மற்றும்

# 43.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 125 புதிய மின்சாரப் பேருந்துகள்

## துணை முதல்வர் உதயநிதி துவக்கி வைத்தார்

**பூந்தமல்லி, டிச. 20-**

பூந்தமல்லி மின்சாரப் பேருந்து பணிமனை மற்றும் புதிதாக 125 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் சேவையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (வெள்ளிக்கிழமை) கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகளை தவிர்க்கும் விதமாக, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, எரிபொருள் செலவைக் குறைக்கும் வகையிலும் காற்று மாசைக் கட்டுப்படுத்தும் வகையிலும் டீசலில் இயங்கும் பேருந்துகளுக்கு மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல், இயற்கை எரிவாயு மற்றும் மின்சாரப் பேருந்துகளை இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக உலக வங்கியின் உதவியுடன், மொத்த விலை ஒப்பந்தத்தில், 1,225 மின்சார பேருந்துகளை வாங்க தமிழ்நாடு அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதில், முதற்கட்டமாக, அசோக் லெலண்ட் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஓம் குளோபல் மொபிலிட்டி நிறுவனத்திடமிருந்து 625 பேருந்துகளை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்நிலையில் முதற்கட்டமாக கடந்த ஜூன் மாதம் 30-ஆம் தேதி ரூ. 208 கோடியில் 120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். பேருந்துகளை மின்னேற்றம் செய்வதற்கான கட்டுமானப் பணிகள், பராமரிப்புக் கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் ரூ.47.50 கோடியில் மேம்படுத்தப்பட்ட மின்சாரப் பேருந்து பணிமனையை வியாசர்பாடியில் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மேலும் 135 மின்சாரப் பேருந்துகள் சேவை பெரும்பாக்கம் பணிமனையிலிருந்து இயக்கப்பட்டன.

இந்த நிலையில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பூந்தமல்லி பேருந்து பணிமனை ரூ. 43.53 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மின்சாரப் பேருந்து பணிமனையாக மாற்றப்பட்டது. இந்த பணிமனையில் உரிய கட்டட உள்கட்டமைப்பு, பேருந்துகளுக்கு மின்னேற்றம் செய்வதற்கு 25 சார்ஜிங் பாய்ண்ட் அமைப்பு, பராமரிப்புக் கூடம், அலுவலக நிர்வாகக் கட்டடம், பணியாளர்கள் ஓய்வறை ஆகியவை புதுப்பிக்கப்பட்டும், புதிய மின்மாற்றிகள் பொருத்துதல் மற்றும் தீயணைக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 3-ஆம் கட்டமாக ரூ. 214.50 கோடி மதிப்பிலான 45 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதனப் பேருந்துகள், 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் என 125 பேருந்துகள் இயக்க முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் மேம்படுத்தப்பட்ட புதிய மின்சாரப் பேருந்து பணிமனை திறப்பு விழா மற்றும் 125 தாழ்தள மின்சாரப் பேருந்துகளை இயக்கி வைக்கும் நிகழ்ச்சி பூந்தமல்லி பணிமனையில் நேற்று காலை (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, புதிய பணிமனையை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து 3-வது கட்டமாக பூந்தமல்லி பணிமனையில் இருந்து 125 மின்சார பேருந்துகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் அவர் மின்சாரப் பேருந்தில் ஏறி பயணம் செய்தார்.

## பாராளுமன்ற.... (1-ம் பக்க தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தொடரின் போது சபையின் செயல்பாடு 111 சதவீதமாக இருந்தது என்று ஓம் பிர்லா கூறினார்.

மாநிலங்களவை நேற்று காலை கூடியதும் அவைத் தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணன், 15 நாட்கள் நடைபெற்ற கூட்டத் தொடரின் போது மேற்கொள்ளப்பட்ட சட்டமியற்றும் மற்றும் பிற நடவடிக்கைகள் குறித்த சுருக்கத்தை வாசித்தார். பின்னர் மாநிலங்களவை காலவரையின்றி ஒத்திவைப்பதாக அவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவித்தார். இதையடுத்து மேல் சபையிலும் குளிர்கால கூட்டத்தொடர் நிறைவுபெற்றது. இரு அவைகளின் நிறைவிலும் வந்தே மாதரம் இசைக்கப்பட்டது. நேற்று டெல்லி காற்று மாசு குறித்து விவாதிக்கப்பட இருந்த நிலையில் அது குறித்து விவாதிக்கப்படாமலேயே தொடர் முடிவுக்கு வந்தது.

## தமிழ்நாட்டில் வெளியானது.... (1-ம் பக்க தொடர்ச்சி)

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 18,81,144.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 5,63,785.

### திருவண்ணாமலை:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 21,21,902.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 18,70,744.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 2,51,162.

### ராணிப்பேட்டை:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 10,57,700.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 9,12,543.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,45,157.

### மதுரை மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 27,40,631.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 23,60,157.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 3,80,474.

### கள்ளக்குறிச்சி:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 11,60,607.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 10,76,278.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 84,329.

### சென்னை மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - - 40,04,694.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 25,79,676.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 14,25,018.

### வேலூர் மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 13,03,030.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 10,88,005.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 2,15,025.

### நீலகிரி மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - - 5,89,167.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 5,33,076.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 56,091,

### தூத்துக்குடி மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 14,90,685.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 13,28,158.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,62,527.

### நாமக்கல் மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 14,66,660.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 12,72,954.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,93,706.

### சேலம் மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 30,30,537.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 26,68,108.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 3,62,429.

### திருப்பத்தூர்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 9,99,411.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 8,82,672.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,16,739.

### திருவள்ளூர்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 35,82,226.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 29,62,449.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 6,19,777.

### தேனி மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 11,30,303.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 10,04,564.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,25,739.

### சிவகங்கை மாவட்டம்:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 12,29,933.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் -10,79,105.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,50,828.

### ராமநாதபுரம் மாவட்டம்

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 12,08,690.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 10,91,326.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 1,17,364.

### மயிலாடுதுறை:

1) முன்பிருந்த வாக்காளர்கள் - 7,83,500.

2) தற்போது உள்ள வாக்காளர்கள் - 7,108,022.

3) நீக்கப்பட்ட வாக்காளர்கள் - 75,378.

வாக்காளர் பட்டியல் பெயர் இருக்கிறதா என்பதை, voters.eci.gov.in என்ற இணைய தளத்தில், வாக்காளர் அடையாள அட்டை எண்ணை Enter செய்து தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சரியான முகவரியில் இருந்தவர்களை தவிர, உயிரிழந்தவர்கள், முகவரி மாற்றியவர்கள், கண்டுபிடிக்க முடியாதவர்கள் மற்றும் இரட்டை பதிவு வாக்காளர்கள், ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இந்த பட்டியலில் நீக்கப்பட்டதற்கான காரணங்கள் சரியில்லை என ஆட்சேபனைகள் ஏதேனும் இருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் ஜனவரி 18-ம் தேதி வரை தெரிவிக்கலாம்.

இடம் மாறியவர்கள் படிவம் 8, புதியதாக சேர்ப்பவர்கள் படிவம் 6 ஆகியவற்றை பூர்த்தி செய்து ஆவணங்களுடன் வழங்கி, வாக்காளர் பட்டியலில் ஜனவரி 18ஆம் தேதிக்குள் இணைத்துக் கொள்ளலாம்என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்ளவும் மேலும் ஒரு மாத கால அளவுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு (2026) பிப்ரவரி மாதத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் மட்டுமே 2026 சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்கவும், போட்டியிடவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் நேற்று, சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரித் துறை ஆணையர் நாகராஜன், இணை ஆணையர் (நிர்வாகம்) பூங்கொடி, மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.